[illegible]

V3: No. 18 1 May 1930

SL
0702 11, N28KN
N 30.3.18.
189102

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஹு மே மீ 1உ [No. 18.

28 MAY 1930

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader). 341
2. அப்பர் (யுத்தக்கலை) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 343
3. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 345
4 நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—4 பதிகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 347
5. குறுந்தொகை (பாட்டு 41—52) K. இராமரத்நம் ஐயர் B. A. 348
6 ஆச்சரிய சூடாமணி (கணையாழி அங்கம்) R. முத்தையர் 351
7. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 353
8. கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A, B. L 355
9. வர்த்தமானம் 357


## கலாநிலயம்

189102

### நல்லோர் கடன்.

“வழுவிலா முழுமையால் வயங்கு வாழ்க்கையில் ஒழுகுவார் அழகினை உன்னி நோக்கினால் எழுவதோ ரிதயமும் இயங்கு மார்வமும் கெழுமிசே ருவகையுங் கிளருமிஞ் ஞாலமே”, என்று என்று உருகுகின்ற பரிவனோடு ஓயாது உணர்த்துவார் நம் கவிவரர் இரவீந்திரநாதரனைய சில மேலோர். ஆன்ம கோடிகளின் நன்மைக்காகவே அருந்தவம்கிடக்கும் ஸ்ரீ அரவிந்தரும் இன்னதே உண்மையென் றுணர்ந்த தூய்மையர். அருங்கலைகளின் பெருமையெல்லாம் ஆய்ந்து ஆய்ந்து தோய்ந்த சிந்தையர் இரவீந்திரர். கலையினது அருமைக்கு அயலல்லாரெனினும், அரசியல் துறைகளின் ஆழத்திலும் ஊடாடிய அனுபவத்தாலும் முதிர்ந்தவர் அரவிந்தர். அவ் விரவீந்திரநாதர், இவ் வரவிந்தருடைய பெருமையைப் பாராட்டி வரைந்த ஒரு சிறு கட்டுரையின் விழுமிய பொருள்களை முன், “சொல்வோரிற் கேட்பவ ரருமை” (1வது வால்யூம், இதழ்கள் 27முதல் 33 வரையில்) என்னும் தலையங்க வரிசைகளில் நாம் முயன்று விளக்கியிருக்கின்றோம். அக்கட்டுரையையும், அதனைத் தழுவிய தலையங்கங்கள் விளக்கியிருக்கின்ற சில வாய்மைகளையும் இக்காலம் நினைவிற் கொணர்ந்து ஆராய்தல் நலமாம்.

ஏனெனில், தன்னிலை தெரிந்து நிற்கத் தவித்திடும் இத்தேயம், அளப்பரிய இடுக்கண்களிடையே மொத்துண்டு இன்று சுழல்கின்றது. இச் சுழற்சியிலகப்பட்டுத் தத்தளிப்போர் எண்ணிறந்தோர்; கரைநின்று கண்டிருப்போர் தொகுதிக்குங் குறைவில்லை. இவ்விருதிறத்தோரும், செய்யப்படும் கருமத்தின் தன்மையையும் நோக்கத்தினையும் நன்கு தெளிந்து கொள்ளவேண்டும். நிகழ்த்துகின்ற காரியம் நிறைவேறும்பொருட்டு மேற்கொண்டுள தாளாண்மை, தறுகணாண்மை, மெய்வருத்தம்பாரா வீரம் முதலிய குணங்களைக்காணுந்தோறும்வியப்பும் அன்னவர்பால் அன்பும் அதிகமாகின்றதென்பதற் கையமில்லை. இக்கருமம் கைகூடாதபடி இடையூறு செய்வார்மாட்டு வெறுப்பும்வெகுளியும் மிகுவதும் இயற்கையே. சிறையா செல்கின்றேன்; அடியா படுகின்றேன்; உயிரேயா இழக்கின்றேன்; என்ன ஒன்றிற்கு மஞ்சாது முன்வந்து நிற்கின்ற மக்களைப் பெற்றுள எவ்வியக்கமும் நற்றவம் செய்ததாகவே இருத்தல் வேண்டும். இவ்வியக்கத்தின் நோக்கத்தையும்,அதனிற்கு ஆட்பட்டுப் பலவித இடையூறுகளுக் குள்ளாவாரது தீரத்தையும் பாராட்டுகின்றவர்களிலும், “இத்தகைய சட்டமறுப்பு முறைகளைக் கையாள்வதில் மக்கள் மனம் திரிந்து போக நேரினும் நேரலாம்; சட்டமும், அதனை நிறுவுவோரும் செலுத்துவோரும் எத்தகையாராயினும், மக்கள் அதற்கு அடங்காது தங்களுடைய மனம் போனபடி மறுக்கத் தலைப்பட்டால் பின் முடிகின்ற இடம் எது ? எல்லாருக்கும் எக்காலத்திலும் நல்லதேயாக நிற்கக்கூடிய சட்டம் ஒன்றுமில்லை. அப்புறம் ஒவ்வொருவனும் தன்னிஷ்டத்திற்குத் தடையாயிருப்பதெல்லாம் தள்ளவேண்டிய சட்டமே என்று

முழங்கித் தன்னோடு நாலுபேரைச் சேர்த்துக்கொண்டு ஆரவாரம் செய்து சட்டதிட்டங்களைக் கடக்கக் கருதினால் பின் குடிவாழ்க்கை நடைபெறுவ தெங்ஙனம்? ஆடையணிந்துதான் வீதியிற்போகலாம் என்று வற்புறுத்துகின்ற உரிமை எச்சட்டத்திற்குமில்லை என்று கனடாதேசத்தில் சிலர் குழப்பம் விளைவிக்கின்றனர். சுயராஜ்யமே வந்ததென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது மாத்திரம் எல்லாத் தொகுதியினராலும் ஏற்றுக்கொள்ள இயலாத சில சட்டங்கள் இருக்க நேராதென்பது என்ன நிச்சயம்? இன்றைக்குக் கற்ற முறையைத்தானே அன்றைக்கும் காட்டுவார். ஆயின், நாட்டில் அமைதியும் நல்வாழ்வும் நிலைத்திருக்க இடமே இல்லாமற் போய்விடு மன்றோ!" என்று இன்னபடி எண்ணி அயிர்க்கின்ற வகையினர்களும் இருக்கின்றனர் என்பதை மறத்தலாகாது. இவ்விரு வகையினரன்றி மற்றுமோர் இனத்தவரும் இருக்கலாம். அவர், "இவ்வியக்கம் வென்றாலுந் தோற்றாலும் பொதுஜனங்களுக் கதனால் என்ன பயன்? தனிமக்களின் தொகுதியே பொதுஜனங்களாகின்றதாதலால் தனித்தனி மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு, ஆள்வோர் நிறமும் ஆட்சிமுறையும், எத்தைய தீங்கு இழைக்க இயலும், அல்லது எவ்வகை உதவி புரிய இயலும்" என்று ஐயுறுங் கொள்கையர். (இம்மூவினத்தவரு மல்லாமல், "யாராண்டாலென்ன, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ. உன் கைக்கு நாலுகாசு கிடைக்கின்றவழியை விட்டுவிட்டு வீண்வம்பெல்லாம் உனக்கேன்" என்று ஓதுவாரும் இருப்பாராலும் அவர்களைப்பற்றி இங்குப் பேச்சில்லை.)

இன்னபடி யெல்லாம் இருந்தேங்கி நெஞ்சம் புண்ணுகின்ற காலத்தில், இரவீந்திரநாதர் விளம்பிய நல்வாழ்வி னிலக்கணம் நம்மனோர்க்கு நிலைத்ததோர் பற்றுக்கோடாகும். ஆன்றோர் வாழ்ந்த வாழ்க்கையை இலக்கியமாக வைத்துக்கொண்டு, அவ்விலக்கியத்திற் கண்டதற்கே இக்கவிவரர் இலக்கணம் இயம்பினாரதலின், உய்த்துணரும் பயிற்சிபெற்ற யாவர்மனத்திலும் ஒருபோ தல்லாக்கால் ஒருபோது உதித்திருக்கக் கூடிய எண்ணங்களையே அவர் மொழிந்தன ராதல் வேண்டும். சுருங்கச்சொல்லும் நயத்தினாலது சிறந்து விளங்குகின்றது. "உனது வாழ்க்கை வரவர முழுமையை எய்துகின்ற தென்னும் உணர்ச்சி தோன்றுகின்றதா, அல்லாவிடில் வரவரக் குறைவே அடைகின்ற தென்னும் எண்ணம் தோன்றிக் குழம்புகின்றதா என்பதை உன் நெஞ்சையே தடவிச் சோதித்துப் பார்த்துக்கொள். முன்னதாயின் உன்வாழ்வு திரள்கின்றது, பின்னதாயின் பிதிர்கின்றது. நிறைவுங் குறைவும் நிலைக்கின்ற உள்ளுணர்ச்சிக்குப் புறத்தே கிடக்கின்ற சாதனங்களும் பொருள்களும் இன்றியமையாதவைகளாகா. ஆன்மவாழ்வு சிதைவடைந்துவருமெனின் தனதாய முறைகளையும் அரசியல் முறைகளையும் புறத்துநின்று நிறுவிக்கொண்டிருப்பது, இறந்தோர் மீது புறங்காட்டில் கட்டிவைக்கும் மாடங்களையொக்கும்," என்பது இரவீந்திரநாதருடைய கட்டுரையின் பிண்டப் பொருளாகும். "மக்களுடைய தனிவாழ்க்கையின் தன்மைக் கேற்றவண்ணம் அவருடைய அரசும் சட்டங்களும் தாமே திருந்தி அமைந்துகொள்ளும்" என்று இயம்பிய எமர்ஸனது கருத்தும் (1-வது வால்யூம், 56-வது பக்கம்) அதற்கு அவ்வறிஞர் கூறும் ஆதாரங்களும், பொது வாழ்க்கைக்கும் தனிவாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை உணர்த்தி, இரவீந்தரநாதர் காட்டிய இலக்கணத்தின்படி வாழ்வதால் விளையும்பயனை வற்புறுத்துகின்றது. நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர்ப் பிரான்ஸ் தேயத்தில் குடிகளெல்லாம், தம்மை ஆள்வோர் கொடுமைக்கு ஆளாகமாட்டோம் என வெகுண்டெழுந்து செய்ததோர் புரட்சியின் பயனாய்க்குடியரசுமுறை நிறுவித் தம் கருத்தை நிறைவேற்றிக்கொண்ட சரித்திரம் (The French Revolution) அனைவரும் அறிந்ததே. இந்தப் புரட்சியைச்சார்ந்த நோக்கம் நிலை நிகழ்ச்சிகள் பொதுப்பயன் யாவையும் இணையிலா மதிநுட்பத்தால் தத்துவவுணர்வு தலைசிறக்க ஆய்ந்த கார்லைல் என்பவர் வரைந்துள நூல் இன்று உலகத்திற் சிறந்த நூல்களுள் ஒன்றாகக் கொண்டாடப்படுகின்றது. இத்தகைய வித்தகர், "ஆன்ம வாழ்க்கைக்கு மக்கள் அயலானபின், சட்டச் சீர்திருத்தங்களாலும், பிரஞ்சுப் புரட்சியைப்போன்ற பொதுஜனப் புரட்சியாலும் எந்நோயும் தீர்வதென்பதில்லை. குட்டநோய்க்குக் கந்தல்துணிக் கட்டுவதையே நிகர்க்கும் இது" என வன்மையோடு உரைத்தனர் என்றால், அதனுண்மையை, உணர முயல்வது எளிதன்றெனினும், நம்பி நிற்பது சுலபமே.

இன்னோரன்ன மேலோருரைகளையும், அவரவர் பகுத்தறிவையும் மனச்சாக்ஷியையும் துணைகொண்டு, இற்றைக்குஇந்நாட்டில் நிகழ்கின்றவைகளின்தன்மையை ஆர அமர்ந்து யாவரும் சிந்தித்தல் வேண்டும். உணர்வொன்றும் ஒழுக்கமொன்றுமாய் மனமும் மெய்யும் மாறுபட்டுழல்வதால், நினைத்தொன்றும் விளைவது வேறுமாய் முடியும். வாழ்க்கையின் இலக்கணத்தை எதிர்வைத்து, அதற்கு இணங்குமாயின் இயக்கம் சால்புடைத்தென்றும், இணங்காதாயின், செய்வதற்குரிய கருமம் வேறாதல் வேண்டுமென்றும் கொள்வதற்கியன்ற வீரமும் வாய்மையும் கைவரமுயல்வது நல்லோர் கடன்.



# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்

### 7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[325-வது பக்கத் தொடர்ச்சி]

### III உழிஞை (நொச்சி)

தேவாரத்தில், பெரும்பாலும் உருவகத்திலேயே உழிஞை காணப்படும். நம் தேகமாகிய கோட்டையை முற்றுகைசெய்யும் வஞ்சகக் கள்வர் ஐவர். பஞ்சப் புலன்களென்போர், மோக்ஷத்தையே கருதும் அடியார்களை நடுக்கஞ் செய்வது நமது திருமுறைகளில்மாத்திரமல்லாமல் ஞானக்கண்பெற்ற எப்புலவர் பாடல்களிலும் நாம் காணலாகும். உழிஞை * என்பது, பகைவர்வந்து ஒரு அரசனதுமதிலைவளைத்து அதன் அரணையழித்து உள்ளே புகுவதற்குப் பிரயத்தனம் செய்வதாம். இதை எதிர்ப்பது உள்ளே யிருப்பவர் கடன். அதனைப் புறத்திணையில் † நொச்சி என்று அழைப்பர். எனவே உழிஞையின் ஒரு பகுதியே நொச்சியாகும். இது அகத்திணையிற் கூறப்படும் மருதத்திற்கு புறம் என்பர்.

உழிஞை தானே மருதத்துப் புறனே
முழுமுத லரண முற்றலுங் காத்தலு
மெனவிரு வகைய ததுவென மொழிப.

—இலக்கண விளக்கம். 607

உழிஞை முப்பது துறைகளையுடைத்து. நொச்சி ஒன்பது துறைகளுடைத்து. அவற்றின் விவரம் புறப்பொருள் வெண்பாமாலையிலும், இலக்கணவிளக்கம் சூத்திரம் 608, 609, இவற்றிற் காண்க. தேவாரத்தில் இத்திணையின் உருவகங்கள் ¶ அமைந்த பாசுரங்கள்:—

வளைத்துநின் றைவர் கள்வர்
வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித்
தழலெரி மடுத்த நீரில்
திளைத்துநின் றாடு கின்ற
வாமைபோற் றெளிவி லாதேன்
இளைத்துநின் றாடு கின்றே
னென்செய்வான் றோன்றி னேனே.

—தனித் திருநேரிசை 10.

முந்தி வட்டத்திடைப் பட்டதெல்லா முடிவேந்தர் தங்கள்
பந்திவட்டத்திடைப் பட்டலைப்புண்பதற்கஞ்சிக்கொல்லோ
நந்தி வட்டந்நறு மாமலர் கொன்றையு நக்கசென்னி
அந்தி வட்டத் தொளியானடிச் சேர்ந்ததென் னுருயிரே.

—ஆருயிர்த் திருவிருத்தம்.8.

ஒருவரைத் தஞ்சமென் றெண்ணா
துன்பாத மிறைஞ்சுகின்றார்
அருவினை சுற்ற மகல்வி கண்டா
யண்ட மேயணவும்
பெருவரைக் குன்றம் பிளிறப்
பிளந்து வேய்த் தோளியஞ்சப்
பருவரைத் தோலுரித்தா யெம்மை
யாளும் பசுபதியே.

பசுபதி திருவிருத்தம்-4.

நொச்சித் துறைகளுக்குத் தேவாரத்தில் உதாரணங்கள் பலஉள. "ஏப்புழை ஞாயில் ஏந்துநிலை யரணம் காப்போர் நொச்சி'க்கு இலக்கணவிளக்கத்தார் அடியிற்கண்ட செய்யுளை உதாரணமாகத் தருகின்றனர்.

"ஆடரவம் பூண்டான் அழலுணச் சீறிய
கூடரணங் காப்போர் குழாம்புரைய—சூடினா
ருச்சி மதிவழங்கு மோங்கு மதில்காப்பா
னொச்சி நுதிவே லவர்"

இவ்வாறு திருநாவுக்கரசுநாயனார் கூறாது, சிவபெருமான் உள்ளத்தினின்று ஊனத்தை ஒழித்துக் காத்தலை நொச்சித் திணையில் காட்டுகின்றார்:—

வானமது வெல்லா முடையான் றன்னை
வரியரவக் கச்சானை வன்பேய் சூழக்
கானமதில் நடமாட வல்லான் றன்னைக் [மேல்
கடைக்கண்ணான் மங்கையையு நோக்கா வென்
ஊனமது வெல்லா மொழித்தான் றன்னை
யுணர்வாகி யடியேன துள்ளே நின்ற
தேனமுதைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.

திருவாலவாய்த் திருத்தாண்டகம்-4.

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சை
யுண்டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்மேற்
பொறிமேவு கொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை
மாடச்சுடர்க் கொழுந்தே.

திருத்தூங்கானை மாடம் - திருவிருத்தம் 1.

### IV தும்பை

தும்பையாவது, கருங்கழல் வேந்தன் செங்களங் கருதிப் பசுந்துணர்த்தும்பைவெண்பூச் சூடியபின்னர் யுத்தத்திற்குச் சித்தமாய் நடக்கும் இருபத்தெட்டுத் துறைகளை யுடையதாம். இது நெய்தற் றிணைக்குப் புறனென்பர்.

* இது ஒருவகைப் பூ. பகைவர் கோட்டையை முற்றுகை யிடும்போது, அத்தொழில் பூண்ட போர்வீரர் இப்பூவைச் சூடுவது மரபாதலால் இத்தொழிலுக்கு உழிஞை யென்னும் பேர் வழங்கலாயிற்று:—

"முடிமிசை யுழிஞை சூடி யொன்னார்
கொடிநுடங் கெயில்கொளக் குறித்த வுழிஞை."

† எயில் காப்பதற்கு நொச்சிப்பூ அணிதல் மரபு. நொச்சி யென்பது பஞ்ச வில்வத்தி லொன்று. "நொச்சியே நறுவிளா, நுவன்ற கூவிளம், வைச்சிடும் கிளுவையே, மாவிலிங்கியின் பச்சிலை யென்றவை பஞ்சவில்வமே". இச்செடி பெரும்பாலும் வேலியாக நடப்படும்.

¶ "ஐத்தானத் தகமிடறு சுற்றி யாங்கே
யகத்தடைத்தா வியாதொன்று மிடுவா ரில்லை"

பலவகைத் திருத்தாண்டகம்-2.

தும்பை தானே நெய்தலது புறனே
மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலை யழிக்குஞ் சிறப்பிற் றென்ப.

—இலக்கண விளக்கம் - 610.

தும்பை சிவபெருமானுக் குரியதோர் பூவாம்:—

ஏடேறு மலர்க்கொன்றை யரவு தும்பை
யிளமதிய மெருக்குவா னிழிந்த கங்கை
சேடேறிந்த சடையானைத் தேவர் கோவைச்
செப்பொன்மால்வரையானைச் சேர்ந்தார்சிந்தைக்
கேடிலியைக் கீழ்வேளூ ராளுங்கோவைக்
கிறிபேசி மடவார்பெய் வளைகள் கொள்ளும்
காடவனைக் கஞ்சனூ ராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டுய்ந் தேனே.

திருக்கஞ்சனூர் - திருத்தாண்டகம் 6.

தும்பையின் செய்கையில் எடுத்துக் காட்டுவது எண்ணலர் அழிவினுக்கு இரங்கிய பக்கமாம்:—

பண்டோர் நாளிகழ் வான்பழித் தக்கனார்
கொண்ட வேள்விக்கு மண்டைய துகெடத்
தண்ட மாவிதா தாவின் றலைகொண்ட
செண்டர் போற்றிரு நாகேச் சரவரே. 5

கழல்கொள் காலினர் காலனைக் காய்ந்தவர்
தழல்கொள் மேனியர் சாந்தவெண் ணீறணி
அழக ரானிழற் கீழற மோதிய
குழகர் போற்குளிர் நாகேச் சரவரே. 8.

வட்ட மாமதின் மூன்றுடன் வல்லரண்
சுட்ட செய்கைய ராகிலுஞ் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் போற்றிரு நாகேச் சரவரே. 9.

திருநாகேச்சரம் - திருக்குறுந்தொகை.

இத்துறைக்குச் சார்பானவைகளே பெரும்பாலும் தேவாரத்திற் காணப்படும். அவையாவன: —

(1) நேரலர் பனிப்ப நெஞ்சிடைக் குளித்த
கூரயில் பறித்துக் கைக்கொண்ட நூழில்.

(உ - ம்)

கானவன்காண் கானவனாய்ப் பொருதான் றான்காண்
கனலாட வல்லான்காண் கையி லேந்தும்
மானவன்காண் மறைநான்கு மாயி னான்காண்
வல்லேறொன் றதுவேற வல்லான் றான்காண்
ஊனவன்காண் உலகத்துக் குயிரா னான்காண்
உரையவன்கா னுணர்வவன்கா னுணர்ந்தார்க்
தேனவன்காண் டிருமுண்டீச் சரத்துமேய [கென்றும்
சிவலோகன் காணவனென் சிந்தை யானே.

திருமுண்டீச்சரம்- திருத்தாண்டகம் 5.

(2) மாறிரு வேந்தன் வயப்படை யுடைய
வேறிரித் தாடிய நூழி லாட்டு.

[நூழில் - கொன்று குவித்தல்]

(உ - ம்)

உதைத்தவன்கா ணுணராத தக்கன் வேள்வி
யுருண்டோடத் தொடர்ந்தருக்கன் பல்லை யெல்லாம்
தகர்த்தவன்காண் டக்கன்றன் றலையைச் செற்ற
தலையவன்காண் மலைமகளா முமையைச் சால
மதிப்பொழிந்த வல்லமரர் மாண்டார் வேள்வி
வந்தவியுண் டவரோடு மதனை யெல்லாம்
சிதைத்தவன்காண் டிருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே.

திருமுண்டீச்சரம் - திருத்தாண்டகம் 7.

(3) யானை மறத்தோடு குதிரை மறமும்:—

உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றானுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றிருளுடைய கண்டத்தர் செந்தீ வண்ணர்
இமையவர்கள் தொழுதேத்து மிறைவ னார்தாம்
பொருளுடைய ரல்ல ரிலரு மல்லர்
புலித்தோ லுடையாகப் பூதஞ் சூழ
அருளுடைய வங்கோதை மாலை மார்பர்
அழகியரே யாமாத்து ரைய னாரே.

திருவாமாத்தூர் - திருத்தாண்டகம் 5.

(4) இருபாற் படையு மேத்த நெடுந்தகை
பெரும்போர் புரிந்த தானைநிலை

சென்றச் சிலைவாங்கிச் சேர்வித்தான் காண்
டீயம் பன்காண் டிரிபுரங்கண் மூன்றும்
பொன்றப் பொடியாக நோக்கி னான்காண்
பூதன்காண் பூதப் படையாளி காண்
அன்றப் பொழுதே யருள்செய் தான்காண்
அனலாடிகா ணடியார்க் கமுதா னான்காண்
மன்றன் மணங்கமழும் வார்சடை யான்காண்
மாகடல்சூழ் கோகரண மன்னி னாரே.

வெட்ட வெடித்தார்க்கோர் வெவ்வழ லன்காண்
வீரன்காண் வீரட்ட மேவி னான்காண்
பொட்ட வனங்களையு நோக்கி னான்காண்
பூதன்காண் பூதப் படையி னான்காண்
கூட்டக்கடுவினைகள் காத்தாள்வான்காண் [காண்
கண்டன்காண் வண்டுண்டகொன்றையான்
வட்டமதிப் பாகஞ் சூடி னான்காண்
மாகடல்சூழ் கோகரண மன்னி னானே.

திருக்கோகரணம் - திருத்தாண்டகம். 5 & 9.

(5) பெருபடை யகலாப் போர்புரி நிலை.

வீரமிக் கெயிறு காட்டி விண்ணுற நீண்டரக்கன்
கூரமிக் கவனைச் சென்று கொன்றுடன் கடற்ப டுத்துத்
தீரமிக் கானிருந்த திருவிரா மேச்சு ரத்தைக்
கோரமிக் கார்த வத்தாற் கூடுவார் குறிப்பு ளாரே.
ஆர்வல நம்மின் மிக்கா ரென்றவவ் வரக்கர் கூடிப்
போர்வலஞ்செய்துமிக்குப் பொருதவர்தம்மை வீட்டித்
தேர்வலஞ்செற்ற மால்செய் திருவிரா மேச்ச ரத்தைச்
சேர்மட நெஞ்சமே நீ செஞ்சடை யெந்தை பாலே.

திருவிராமேச்சரம் - திருநேரிசை - 6.

ஒட்டக்கூத்தர் பாடிய

**தக்கயாகப் பரணி**

மகாமகோபாத்தியாய உ. வெ. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



2 8 MAY 19

# தமிழ்ப் பாடம் 120.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[336-வது பக்கத் தொடர்ச்சி.]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

பாண்டவர்க் குரிய பாகத்தைத் துரியோதனன் மறுக்கவே, கண்ணபிரான், அன்னதிற் பாதியாகிலும் கொடுப்பாய் என்று கேட்க, அவன் அதையும் மறுக்க, பின், கண்ணன் ஐந்தூர் தருமாறு கேட்கின்ற செய்யுளொன்று விடப்பட்டது.

பாட ளிக்குல நெருங்குபைந் துளப
மாலையாய் மகர வேலைசூழ்
நாட ளித்திட வுமைந்துபே ருடைய
நகரளித் திடவும் வேண்டுமோ
காட ளிக்க வதனிடை திரிந்துறை
கரந்து போயினர்கள் காணவோர்
வீட ளிக்கினும் வெறுப்பரோ விதனை
விடுகவென் றெதிர்வி ளம்பினான். 52

ஐந்தூரும் தரத் துரியோதனன் மறுக்கின்றான்.

பதவுரை.

அளி - வண்டுகளினது, குலம் - கூட்டம், மாடு - பக்கத்தில், நெருங்கு-நெருங்கி மொய்க்கின்ற, பை - பசுமையான, துளபமாலையாய் - துளசி மாலையை அணிந்தவனே,

மகரம் - மகர மீன்களையுடைய, வேலை-கடல்,சூழ்- சூழ்ந்திருக்கின்ற, நாடு - நாட்டினை, அளித்திடவும் - கொடுக்கவும், (அல்லது) ஐந்து பேர் உடைய - ஐந்து பேருடைய, நகர்- நகரங்களை, அளித்திடவும்-கொடுக்கவும், வேண்டுமோ - வேண்டுமோ?

காடு-காட்டை, அளிக்க-ஆளும்படி நான் கொடுக்க, அதன் இடை - அந்தக் காட்டினிடத்தில், திரிந்து- அலைந்து, (பிறகு) உறை-வசிக்கின்ற இடமும்,கரந்து- தெரியாமல் ஒளித்துக்கொண்டு, போயினர்கள் - அக்ஞாதவாசம் செய்து போனவர்கள், காண - கண்ணில் காண, ஓர் - அவ் வைவருக்கும் சேர்த்து ஒரு, வீடு அளிக்கினும்-வீட்டைக் கொடுத்தாலும்,வெறுப்பரோ -இது போதாதென்று வெறுப்பார்களோ!

(ஆதலால்)இதனை விடுக—நான் கொடுப்பது என்ற வார்த்தையை அறவே விட்டுவிடு, என்று - என்று, எதிர் விளம்பினான் - துரியோதனன் பதில் கூறினான்.

விரிவுரை:—ஆதலால் தருமன் மூன்றாந் தரமாகக் கேட்கும்படி சொன்ன ஐந்து வீடு கேட்பதற்கு இனி யாதும் இடமில்லை. முன் ஈயிருக்கும் இடமேனும் தரேன் என்ற சொல்லையே நிலைநாட்டினான் துரியோதனன். ஒருகால் தூதின்பகுதியாக, ஐந்து வீடுகளேனும் கொடு,என்று கண்ணனே கேட்டிருந்தால்உடன் இருந்த சகுனி அதனைத் தந்து போர் நேராவண்ணம் விலக்கிக்கொள்ளத் தன் மருகனுக்குப் புத்தி புகன்றிருப்பினும் இருக்கலாம். சொல்லி அனுப்பியதை உரைக்கவேண்டு மென்பது தூதனது முறைமை. அன்னபடி கண்ணனே ஐந்து இல்லம் கேளாது விட்டானேல் அவன் தூது பழுதுடையதாகும். ஆதலால் ஒருவீடும் கொடுக்கமாட்டேன் என்று துரியோதனன் தானாகவே இயம்பும்படி கவிஇயற்றிவைத்தார். இதன்பின் ஐந்துவீடு கேட்கவேண்டுமென்பது மிகை.

இவ்வாறு துரியோதனன் மறுக்கவே, கிருஷ்ணன் ஒருகுலத்தில் பிறந்தோர்களுக்கு உரிய உரிமையைத் தருவதே, நீதியும் புகழும் ஆகும் என்று எடுத்துக் காட்டத் துரியோதனன்,'குலமும் உரிமையும் நீதியும் எனக்கிங்கு இபம்பவேண்டா. பாண்டவர்கள் வீரராவரேல் என்னிடத்திலிருந்து வாங்கவேண்டிய வழியில் வாங்கிக்கொள்ளட்டும்' எனத் தருக்கினான். இக் கருத்துகளைக் கொண்டுள மூன்று செய்யுள்கள் விடப்பட்டன.

---

பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவை
புகன்ற பின்பு புயவலியினால்
ஐவர் தங்க ளரசுங் கொடாம லடலாண்
மைகொண் டெதிர டர்த்தியேல்
மெய்வி ளங்கவரு குருநிலத் தினிடை
வந்து வெஞ்சமர் விளைக்கவே
கைவ ழங்குகென நின்ற தூணிடை
யறைந்து ரைக்குமிவை காவலன். 53

போரே செய்வானால் அவ்வுறுதியிலிருந்தேனும் பின் பிறழாதபடி கையடித்துத் தருமாறு கிருஷ்ணன் கேட்கின்றான்.

பதவுரை.

பொய் - பொய்யானது, வளர்ந்த - வளர்கின்ற, மொழி - வார்த்தைகளை உடைய, மன்னன் - துரியோதனன், (மற்று - அசை) இவை - இவ்வாறு, புகன்றபின்பு - சொல்லிய பிறகு,

புயவலியினால் - புயவலியின் செருக்கினால், ஐவர் தங்கள் - பாண்டவர்களது, அரசு - ராஜ்யத்தை, கொடாமல் - கொடுக்காமல், அடல் - பராக்கிரமம் பொருந்திய, ஆண்மை கொண்டு - உன் வீரத்தைக் கொண்டு, எதிர் அடர்த்தியேல் - அவர்களுக்கு எதிராகப் போர்செய்வதே உன் கருத்தானால், மெய் - சத்தியமானது, விளங்க வரு - விளங்குவதற்கு இடமாய் அமைந்துள்ள, குருநிலத்தின் இடை - குருக்ஷேத்திரத்திலே, வந்து - வந்து, வெம் - கொடிய, சமர் விளைக்கவே - யுத்தமே செய்வேன் என்று, கை வழங்குக- கைபோட்டுத் தா, என - என்று கண்ணன் கேட்க,

காவலன் -துரியோதனன், நின்ற-அயலில் இருந்த, தூண் இடை - தூணிலே, அறைந்து - அடித்து, இவை - பின்வருமாறு, உரைக்கும் - சொல்லுவான்.

விரிவுரை:—'மெய் விளங்கவரு குருநில' மென்றது ஆற்றலும் படையின்மிகுதியும் துணைவர்பலமும், அதிகமாயுடையவன் துரியோதனன் ஆயினும், தன்னுடைய பொய்யை நிலைநிறுத்திக்கொள்ளச் செய்யுமப்போரில் தோற்பதே திண்ணம் என்பதைக் குறித்து நிற்கின்றது. யுத்தத்திற்கு எல்லோரும் ஆயத்தமாய் அங்கு வந்து சேர்ந்தபோது ஒருகால், சூதிலும் சூழ்ச்சியே நிறைந்த சகுனி, ஐந்து ஊர் கொடுத்து அமர்நிகழாது அகற்றிவிடச் செய்யினும் செய்யலாம் என அஞ்சிய கண்ணன், போரே புரிய வேண்டுமென்று அவனைக் கைஅறைந்துதரக் கேட்ட

# தமிழ்ப் பாடம் 120.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[ 336-வது பக்கத் தொடர்ச்சி. ]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

பாண்டவர்க் குரிய பாகத்தைத் துரியோதனன் மறுக்கவே, கண்ணபிரான், அன்னதிற் பாதியாகிலும் கொடுப்பாய் என்று கேட்க, அவன் அதையும் மறுக்க, பின், கண்ணன் ஐந்தூர் தருமாறு கேட்கின்ற செய்யுளொன்று விடப்பட்டது.

பாட ளிக்குல நெருங்குபைந் துளப
மாலையாய் மகர வேலைசூழ்
நாட ளித்திட வுமைந்துபே ருடைய
நகரளித் திடவும் வேண்டுமோ
காட ளிக்க வதனிடை திரிந்துறை
கரந்து போயினர்கள் காணவோர்
வீட ளிக்கினும் வெறுப்பரோ விதனை
விடுகவென் றெதிர்வி ளம்பினன். 52

ஐந்தூரும் தரத் துரியோதனன் மறுக்கின்றான்.

பதவுரை.

அளி - வண்டுகளினது, குலம் - கூட்டம், மாடு - பக்கத்தில், நெருங்கு-நெருங்கி மொய்க்கின்ற, பை - பசுமையான, துளபமாலையாய் - துளசி மாலையை அணிந்தவனே,

மகரம் - மகர மீன்களையுடைய, வேலை-கடல்,சூழ்-சூழ்ந்திருக்கின்ற, நாடு - நாட்டினை, அளித்திடவும் - கொடுக்கவும், (அல்லது) ஐந்து பேர் உடைய - ஐந்து பேருடைய, நகர்- நகரங்களை, அளித்திடவும்-கொடுக்கவும், வேண்டுமோ - வேண்டுமோ?

காடு-காட்டை, அளிக்க-ஆளும்படி நான் கொடுக்க, அதன் இடை - அந்தக் காட்டினிடத்தில், திரிந்து-அலைந்து, (பிறகு) உறை-வசிக்கின்ற இடமும்,கரந்து-தெரியாமல் ஒளித்துக்கொண்டு, போயினர்கள் - அக்ஞாதவாசம் செய்து போனவர்கள், காண - கண்ணில் காண, ஓர் - அவ் வைவருக்கும் சேர்த்து ஒரு, வீடு அளிக்கினும்-வீட்டைக் கொடுத்தாலும்,வெறுப்பரோ -இது போதாதென்று வெறுப்பார்களோ!

(ஆதலால்)இதனை விடுக—நான் கொடுப்பது என்ற வார்த்தையை அறவே விட்டுவிடு, என்று - என்று, எதிர் விளம்பினன் - துரியோதனன் பதில் கூறினன்.

விரிவுரை:—ஆதலால் தருமன் மூன்றாந் தரமாகக் கேட்கும்படி சொன்ன ஐந்து வீடு கேட்பதற்கு இனி யாதும் இடமில்லை. முன் ஈயிருக்கும் இடமேனும் தரேன் என்ற சொல்லையே நிலைநாட்டினன் துரியோதனன். ஒருகால் தூதின்பகுதியாக, ஐந்து வீடுகளேனும் கொடு,என்று கண்ணனே கேட்டிருந்தால்உடன் இருந்த சகுனி அதனைத் தந்து போர் நேராவண்ணம் விலக்கிக்கொள்ளத் தன் மருகனுக்குப் புத்தி புகன்றிருப்பினும் இருக்கலாம். சொல்லி அனுப்பியதை உரைக்கவேண்டு மென்பது தூதனது முறைமை. அன்னபடி கண்ணனே ஐந்து இல்லம் கேளாது விட்டானேல் அவன் தூது பழுதுடையதாகும். ஆதலால் ஒருவீடும் கொடுக்கமாட்டேன் என்று துரியோதனன் தானாகவே இயம்பும்படி கவிஇயற்றிவைத்தார். இதன்பின் ஐந்துவீடு கேட்கவேண்டுமென்பது மிகை.

இவ்வாறு துரியோதனன் மறுக்கவே, கிருஷ்ணன் ஒருகுலத்தில் பிறந்தோர்களுக்கு உரிய உரிமையைத் தருவதே, நீதியும் புகழும் ஆகும் என்று எடுத்துக் காட்டத் துரியோதனன்,'குலமும் உரிமையும் நீதியும் எனக்கிங்கு இபம்பவேண்டா. பாண்டவர்கள் வீரராவரேல் என்னிடத்திலிருந்து வாங்கவேண்டிய வழியில் வாங்கிக்கொள்ளட்டும்' எனத் தருக்கினன். இக் கருத்துகளைக் கொண்டுள மூன்று செய்யுள்கள் விடப்பட்டன.

---

பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவை
புகன்ற பின்பு புயவலியினு
லைவர்தங்க ளரசங் கொடாம லடலாண்
மைகொண் டெதிர டர்த்தியேன்
மெய்வி ளங்கவரு குருநிலத் தினிடை
வந்து வெஞ்சமர் விளைக்கவே
கைவ ழங்குகென நின்ற தூணிடை
யறைந்து ரைக்குமிவை காவலன். 53

போரே செய்வானுல் அவ்வுறுதியிலிருந்தேனும் பின் பிறழாதபடி கையடித்துத் தருமாறு கிருஷ்ணன் கேட்கின்றான்.

பதவுரை.

பொய் - பொய்யானது, வளர்ந்த - வளர்கின்ற, மொழி - வார்த்தைகளை உடைய, மன்னன் - துரியோதனன், (மற்று - அசை) இவை - இவ்வாறு, புகன்றபின்பு - சொல்லிய பிறகு,

புயவலியினுல் - புயவலியின் செருக்கினுல், ஐவர் தங்கள் - பாண்டவர்களது, அரசு - ராஜ்யத்தை, கொடாமல் - கொடுக்காமல், அடல் - பராக்கிரமம் பொருந்திய, ஆண்மை கொண்டு - உன் வீரத்தைக் கொண்டு, எதிர் அடர்த்தியேல் - அவர்களுக்கு எதிராகப் போர்செய்வதே உன் கருத்தானுல், மெய் - சத்தியமானது, விளங்க வரு - விளங்குவதற்கு இடமாய் அமைந்துள்ள, குருநிலத்தின் இடை - குருக்ஷேத்திரத்திலே, வந்து - வந்து, வெம் - கொடிய, சமர் விளைக்கவே - யுத்தமே செய்வேன் என்று, கை வழங்குக- கைபோட்டுத் தா, என - என்று கண்ணன் கேட்க,

காவலன் -துரியோதனன், நின்ற-அயலில் இருந்த, தூண் இடை - தூணிலே, அறைந்து - அடித்து, இவை - பின்வருமாறு, உரைக்கும் - சொல்லுவான்.

விரிவுரை:—'மெய் விளங்கவரு குருநில' மென்றது ஆற்றலும் படையின்மிகுதியும் துணைவர்பலமும், அதிகமாயுடையவன் துரியோதனன் ஆயினும், தன்னுடைய பொய்யை நிலைநிறுத்திக்கொள்ளச் செய்யுமப்போரில் தோற்பதே திண்ணம் என்பதைக் குறித்து நிற்கின்றது. யுத்தத்திற்கு எல்லோரும் ஆயத்தமாய் அங்கு வந்து சேர்ந்தபோது ஒருகால், சூதிலும் சூழ்ச்சியே நிறைந்த சகுனி, ஐந்து ஊர் கொடுத்து அமர்நிகழாது அகற்றிவிடச் செய்யினும் செய்யலாம் என அஞ்சிய கண்ணன், போரே புரிய வேண்டுமென்று அவனைக் கைஅறைந்துதரக் கேட்ட



னன்போலும். இன்னபடி கையறைந்து தாஎன்று தன்னைக் கேட்டதால் தன் வாய்மை வடுப்பட்டதென்று வெகுண்டனன் அப்பொய்யன்; அயல்நின்ற தூணிடை அறைந்தனன். அயிலிருந்த தூணைப்புடைத்த தீயோன் இவனுக்குமுன் வேறொருவன் இருந்திருக்கின்றான். அந்த இரணியன் அறைந்த தூணிற்கு உள்நின்றான் நெடுமால்,இங்குப் புறத்தே நிற்கின்றான். வேற்றுமை அவ்வளவே. அந்தத்தில் இருவர் கதியும் ஒன்றே ஆயது.

---

புன்பி றப்புடைய பொதுவர் தங்களொடு
புறவி லானிரை புரந்திடு
முன்பி றப்பு முரலோடு கோவிய
ருனைப்பிணித் ததும றந்துநீ
மன்பி றப்பினுயர் குருகுலத் தவர்தம்
வாய்மை தானுமொரு மாசிலா
வென்பி றப்புமுண ராமலோ சபையி
லிந்த வாசக மியம்பினுய். 54

'தாழ்ந்த பிறப்புடைய நீயோ, உயர் குலத்தவனுன எனது வாய்மையைச் சந்தேகிப்பது' என்று துரியோதனன் கடிகின்றான்.

பதவுரை.

புன்-தாழ்ந்த, பிறப்பு உடைய - பிறப்பை உடைய, பொதுவர்தங்கள்ஒடு - இடையர்களோடு, ஆ நிரை-மாட்டுமந்தையை, புரவுஇல், - முல்லைநிலக் காட்டில், புரந்திடும் - மேய்த்துக்கொண்டிருந்த, உன் - உனது, பிறப்பும் - பிறப்பையும்; கோவியர் - இடைமாதர், உனை-உன்னை, உரலோடு - உரலோடு, பிணித்ததும் - கட்டியதையும், மறந்துநீ - நீ மறந்துபோய்; மன்பிறப்பில் - அரசர் பிறப்பில், உயர் - உயர்ந்தவர்களான குருகுலத்தவர் தம் - குருகுலத்தவர்களுடைய, வாய்மைதானும் - வாய்மையையும், ஒரு மாசு இலா - ஒருவிதமான குற்றமும் இல்லாத, என் பிறப்பும் - எனது உயர்ந்த பிறப்பையும், உணராமல் ஓ-தெரியாமலோ, சபையில்-ராஜசபையில், இந்த வாசகம் - இவ்வுரையை, இயம்பினுய் - (அஞ்சாது) பேசினுய்.

விரிவுரை:—குருகுலத்தவர்களுடைய வாய்மையினிடையில் தன்னுடையபொய் மறைந்துவிடுமென்று எண்ணினனே துரியோதனன். 'மன்னர் பெருமை இடைய றிவரோ' வென இங்குக் கண்ணனை இகழ்கின்றான். தன்னுடைய சத்தியத்தை அயிர்த்தானெனக் கையறைந்துதர இராஜசபையில் கேட்டதால் தன் மானம் போய்விட்டதாம். குணத்தால் இழிந்திருப்பதை மறந்து குலமும் பிறப்புங் கூறிப் பெருமிதங் கொள்வது கயவர் இயற்கை.

குறிப்பு:—"தங்களொடு புறவில்," என்றும், "உரலோடு கோவியர்" என்றும் மூன்றும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடரில் வருமொழிமுதல் வல்லின மெய்கள் மிகாமற் புணர்ந்தன. (வால்யூம் 3, பக்கம் 306).

"உனைப் பிணித்தது," என இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணர்ந்தது—(3வது வால்யூம் 246வது பக்கம்)

## இலக்கணம்.

E. ஐந்தாம் வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளும் பொருளும், முன்னரே (1-வது வால்யூம், 949-வது பக்கம்) கூறியிருக்கின்றோம். இவ்வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்பன. ஆனல்;"ஊரிலிருந்து போனன்,""மனை நின்று அகன்றான்" என நீங்கல்பொருளில், இருந்து நின்று, என்னும் இவைஇரண்டும் சொல்லுருபுகளாக வருவதுண்டு. ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் தமிழில் அதிகம் வழங்குவதில்லை.

I. இருந்து, நின்று, என்னும் சொல்லுருபுகளைப் பெற்ற நிலைமொழிகளுக்குப்பின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

வீட்டிலிருந்து + சென்றான் = வீட்டிலிருந்து சென்றான்.

மனைநின்று+போனன் = மனைநின்று போனன்.

II. ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் சிலபோது மிகாமலும், சிலபோது மிகுந்தும், வருமொழிமுதல் வல்லினமெய், நிலைமொழி யிறுதி உயிரோடு புணர்கின்றது.

(i) ஐந்தாம்வேற்றுமைக்குரிய நீங்கல் ஒப்பு எல்லை ஏது என்ற நான்கு பொருள்களில், நீங்கல் பொருளைக்கொண்ட தொகைநிலைத்தொடரில், வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

வரை+பாய்ந்தான்=வரை பாய்ந்தான் (வரையிலிருந்து பாய்ந்தான்.)

துயர்+தீர்ந்தான்=துயர் தீர்ந்தான் (துயரிலிருந்து நீர்ந்தான்)

நெறி+திறம்பினன்=நெறிதிறம்பினன் (நெறியிலிருந்து திறம்பினன்)

தலை+கழிந்தமயிர்=தலைகழிந்த மயிர் (தலையிலிருந்து கழிந்தமயிர்)

(ii) எல்லைப்பொருளைக் கொண்ட ஐந்தாம்வேற்றுமைத் தொகையில், வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

தஞ்சை+தெற்கு(ப்பட்டுக்கோட்டை)=தஞ்சைத் தெற்குப் பட்டுக்கோட்டை=தஞ்சையின் தெற்குப் பட்டுக்கோட்டை என விரியும். இன், என்னும் உருபு இங்கு எல்லைப் பொருளது.

நாகூர்+கிழக்கு(க்கடல்)=நாகூர்க்கிழக்கு(க்கடல்) (நாகூரின் கிழக்குக்கடல்)

குறிப்பு:—ஒப்புப்பொருளிலும் ஏதுப்பொருளிலும் ஐந்தாம்வேற்றுமைத் தொகைகள் பயின்றுவரக் காணேம்.

(iii) ஐந்தாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகைகள் மிக அருமையாயினும் அவ்வாறு வரும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

கனி + பொன் = கனிப்பொன் (கனியிலிருந்து எடுக்கும் பொன்)

முலை+பால்=முலைப்பால்(முலையிலிருந்துவரும்பால்)

குறிப்பு:—இவை, கனியின்கண் கிடைக்கும் பொன் என்றும், முலையின்கண் சுரக்கும் பால் என்றும், ஏழாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகையாகக் கொள்ளக் கூடியனவுமாம்.

னன்போலும்.இன்னபடி கையறைந்து தாஎன்று தன் னைக் கேட்டதால் தன் வாய்மை வடுப்பட்டதென்று வெகுண்டனன் அப்பொய்யன்; அயல்நின்ற தூணி டை அறைந்தனன். அயிலிருந்த தூணைப்புடைத்த தீயோன் இவனுக்குமுன் வேறொருவன் இருந்திருக் கின்றான். அந்த இரணியன் அறைந்த தூணிற்கு உள்நின்றான் நெடுமால்,இங்குப் புறத்தே நிற்கின்றான். வேற்றுமை அவ்வளவே. அந்தத்தில் இருவர் கதியும் ஒன்றே ஆயது.

---

புன்பி றப்புடைய பொதுவர் தங்களொடு
புறவி லானிரை புரந்திடு
முன்பி றப்பு முரலோடு கோவிய
ருனைப்பிணித் ததும றந்துநீ
மன்பி றப்பிலுயர் குருகுலத் தவர்தம்
வாய்மை தானுமொரு மாசிலா
வென்பி றப்புமுண ராமலோ சபையி
லிந்த வாசக மியம்பினைப். 54

'தாழ்ந்த பிறப்புடைய நீயா, உயர் குலத்தவனை எனது வாய்மையைச் சந்தேகிப்பது' என்று துரி யோதனன் கடிகின்றான்.

பதவுரை.

புன்-தாழ்ந்த, பிறப்பு உடைய - பிறப்பை உடைய, பொதுவர்தங்கள்ஒடு - இடையர்களோடு, ஆ நிரை-மாட்டுமந்தையை, புரவுஇல், - முல்லைநிலக் காட்டில், புரந்திடும் - மேய்த்துக்கொண்டிருந்த, உன் - உனது, பிறப்பும் - பிறப்பையும்; கோவியர் - இடைமாதர், உனை-உன்னை, உரலோடு - உரலோடு, பிணித்ததும் - கட்டியதையும், மறந்துநீ - நீ மறந்துபோய்; மன்பிறப்பில் - அரசர் பிறப்பில், உயர் - உயர்ந்தவர்களான குருகுலத்தவர் தம் - குருகுலத்தவர்களுடைய, வாய்மைதானும் - வாய்மையையும், ஒரு மாசு இலா - ஒருவிதமான குற்றமும் இல்லாத, என் பிறப்பும் - எனது உயர்ந்த பிறப்பையும், உணராமல் ஓ-தெரியாமலோ, சபையில்-ராஜசபையில், இந்த வாசகம் - இவ்வுரையை, இயம்பினைப் - (அஞ்சாது) பேசினைப்.

விரிவுரை:—குருகுலத்தவர்களுடைய வாய்மையி னிடையில் தன்னுடையபொய் மறைந்துவிடுமென்று எண்ணினானே துரியோதனன். 'மன்னர் பெருமை இடைய ரறிவரோ' வென இங்குக் கண்ணனை இகழ் கின்றான். தன்னுடைய சத்தியத்தை அயிர்த்தானெ னக் கையறைந்துதர இராஜசபையில் கேட்டதால் தன் மானம் போய்விட்டதாம். குணத்தால் இழிந்திருப் பதை மறந்து குலமும் பிறப்புங் கூறிப் பெருமிதங் கொள்வது கயவர் இயற்கை.

குறிப்பு:—"தங்களொடு புறவில்," என்றும், "உர லோடு கோவியர்" என்றும் மூன்றும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடரில் வருமொழிமுதல் வல்லின மெய்கள் மிகாமற் புணர்ந்தன. (வால்யூம் 3, பக்கம் 306).

"உனைப் பிணித்தது," என இரண்டாம் வேற்று மைத் தொகாநிலைத்தொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணர்ந்தது—(3வது வால்யூம் 246வது பக்கம்)

## இலக்கணம்.

E. ஐந்தாம் வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளும் பொருளும், முன்னரே (1-வது வால்யூம், 949-வது பக்கம்) கூறி யிருக்கின்றோம். இவ்வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்பன. ஆனால்,"ஊரிலிருந்து போனான்," "மனை நின்று அகன்றான்" என நீங்கல்பொருளில், இருந்து நின்று, என்னும் இவைஇரண்டும் சொல்லுருபுகளாக வருவதுண்டு. ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் தமிழில் அதிகம் வழங்குவதில்லை.

I. இருந்து, நின்று, என்னும் சொல்லுருபுகளைப் பெற்ற நிலைமொழிகளுக்குப்பின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

வீட்டிலிருந்து + சென்றான் = வீட்டிலிருந்து சென்றான்.

மனைநின்று + போனான் = மனைநின்று போனான்.

II. ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் சிலபோது மிகாமலும், சிலபோது மிகுந்தும், வருமொழிமுதல் வல்லினமெய், நிலைமொழி யிறுதி உயிரோடு புணர்கின்றது.

(i) ஐந்தாம்வேற்றுமைக்குரிய நீங்கல் ஒப்பு எல்லை ஏது என்ற நான்கு பொருள்களில், நீங்கல் பொருளைக்கொண்ட தொகைநிலைத்தொடரில், வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

வரை + பாய்ந்தான் = வரை பாய்ந்தான் (வரையிலிருந்து பாய்ந்தான்.)

துயர் + தீர்ந்தான் = துயர் தீர்ந்தான் (துயரிலிருந்து தீர்ந்தான்)

நெறி + திறம்பினான் = நெறிதிறம்பினான் (நெறியிலிருந்து திறம்பினான்)

தலை + கழிந்தமயிர் = தலைகழிந்த மயிர் (தலையிலிருந்து கழிந்தமயிர்)

(ii) எல்லைப்பொருளைக் கொண்ட ஐந்தாம்வேற்றுமைத் தொகையில், வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

தஞ்சை + தெற்கு(ப்பட்டுக்கோட்டை) = தஞ்சைத் தெற்குப் பட்டுக்கோட்டை = தஞ்சையின் தெற்குப் பட்டுக்கோட்டை என விரியும். இன், என்னும் உருபு இங்கு எல்லைப் பொருளது.

நாகூர் + கிழக்கு(க்கடல்) = நாகூர்க்கிழக்கு(க்கடல்) (நாகூரின் கிழக்குக்கடல்)

குறிப்பு:—ஒப்புப்பொருளினும் ஏதுப்பொருளினும் ஐந்தாம்வேற்றுமைத் தொகைகள் பயின்றுவரக் காணோம்.

(iii) ஐந்தாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகைகள் மிக அருமையாயினும் அவ்வாறு வரும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

கனி + பொன் = கனிப்பொன் (கனியிலிருந்து எடுக்கும் பொன்)

முலை + பால் = முலைப்பால்(முலையிலிருந்துவரும்பால்)

குறிப்பு:—இவை, கனியின்கண் கிடைக்கும் பொன் என்றும், முலையின்கண் சுரக்கும் பால் என்றும், ஏழாம் வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகையாகக் கொள்ளக் கூடியனவுமாம்.



செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே;
விடுவா ளல்லளென் றவரிகழ்ந் தனரே;
ஆயிடை யிருபே ராண்மை செய்த
பூச லல்லார்க் கதுவியாங்கென்
அல்ல னெஞ்ச மலமலக் குறுமே.

(உரை). என்னை விட்டுப்பிரிந்து அவர் செல்லமாட்டா ரென்று கருதி நான் (முந்தியே அவரைத்தடுக்க முயலாது) அலட்சியமாக இருந்துவிட்டேன்; யான் அறிந்தால் தன்னைப்போகவிடமாட்டேனென்று நினைத்து அவர் (என்னை) அலட்சியஞ்செய்து போய்விட்டார். இவ்வாறு நாங்களிருவரும் ஒருவரையொருவர் இகழ்திருந்தேமாக, மிக்க வலியாரிருவர் (தம்முள் மாறுபட்டுப்) பொருத பூசல் (அதிற் சம்பந்தப்படாத) நல்லார் பிறரைப் பற்றி வருத்தினாற் போல, எனது நெஞ்சம் துன்பத்தாற் கலங்கி வருந்துகின்றது.

ஆண்மை - (ஆகுபெயர்) ஆண்மையுடையவர். வலியார். பூசல் - போர். கதுவியாங்கு - கதுவினாற்போல்; ஆங்கு; உவமவுருபு. அலமலக்கு - அலமலத்தல், கலங்குதல்.

---

வெள்ளிவீதியார்] 44 [பாலை

தலைமகன் தலைமகளை உடன்கொண்டு போனதைப் பாங்கியால் உணர்ந்து மகளைத் தேடிச்சென்ற செவிலித் தாய் அவளைக் காணாது வருந்திக் கூறியது.

காலே பரிதப் பினவென் கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே;
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

(உரை). (எனது) கால்கள் வலியோய்ந்து செல்ல மாட்டாவாயின; கண்கள் உற்றுப்பார்த்து உற்றுப்பார்த்து ஒளியை இழந்துவிட்டன (தன் அருமைமகளை யிழந்து இவ்வாறு என்னைப்போல வருந்துபவர் சிலரே.) உண்மையாக இவ்வுலகத்தில் இவ்வாறு வருந்தப்பெறுதவர் அகன்ற கரிய விசும்பிலுள்ள நட்சத்திரங்களைக் காட்டிலும் பலரே.

பரி - செலவு, நடத்தல். தப்பின - தவறிவிட்டன. வாள்-ஒளி. இருவிசும்பு, இருமை - கருமை. மீன் - மின்னுவது, நட்சத்திரம். பிறர் - என்னைப்போல் வருந்தப்பெறுதவர்.

---

ஆலங்குடிவங்கனார்] 45 [மருதம்

பரத்தையர்மாட்டுப் புதுப்புனலாடப் பிரிந்த தலைமகன் புலந்துநின்ற தலைமகளைப் புலவிதிருத்துமாறு தோழியை வாயில்வேண்ட அவள் தலைமகளை யுற்று ஊடல் தணிவித்தல்.

காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்க் கழீஇய சென்ற
மல்ல லூரன் எல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவர் தாயே
தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

(உரை) காலைப்பொழுதிலே எழுந்து விசையுள்ளதேரைப் பூட்டிச் சிறந்த அணிகலன்களை அணிந்த (பரத்தை) மகளிரைப் புதுப்புனலாட்டச்சென்ற வளப்பமுற்ற ஊரன் (இப்பொழுது) மிக்க விளக்கமுற்றவனாய் இருப்பதைக்கண்டு அவனைத் தழுவச்சேரும் சிறுபிள்ளைகளின் தாயே, இந் நற்குடியில் பிறத்தல் மிகவும் வெகுளத்தக்கது.

கழீஇய - நீராட்ட. மல்லல் - வளப்பம். எல் - ஒளி. மறுவருதல் - மறுவரல், சேர்தல். தெறுதல் - கோபித்தல். திணை - குடி. பிறத்தல்லே - விரித்தல் விகாரம்.

காலையிற் சென்ற தலைமகன் அந்தியின் மீளக்கண்டு ஆவலுடன் அவனை அணையச்சேரும் மகாரைக் காட்டி,நற்குடி பிறந்தார்க்குப் புலவிநீட்டம் தக்கதன்றெனக் கூறிக் கிழத்தியைப் பாங்கி உடன்படுத்தியவாறும்.

---

மாமிலாடன்] 46 [பாலை

தலைமகன் குறித்துச்சென்ற பருவவரவின்கண் மாலைப் பொழுதுகண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கல் மாந்தி மன்றத்
தெருவி லுண்டாது குடைவன ஆடி
இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல், தோழி, அவர்சென்ற நாட்டே.

(உரை) தோழீ, தலைவர் நம்மைப் பிரிந்து சென்று தங்கிய நாட்டில், ஆம்பற்பூவின் (வாடிய) பழம்பூவைப்போலக் குவிந்த சிறகையுடைய மனைவாழும் குருவிகள் வீடுகளின் முற்பக்கங்களிலே உலர்த்திய தானியங்களை உண்டு ஊரின் நடுவிலுள்ள பொதுவிடங்களில் எருவின் நுண்ணிய புழுதியிற்குடைந்து திளைத்து, வீட்டின் இறப்பிடத்துள்ள தமது சேக்கையில் குஞ்சுகளோடு தங்கும் துன்பம் விளைக்கும் மாலைப்பொழுதும் (அக்காலத்தில், துணைவரைப் பிரிந்து தனித்துறைவார்க்கு உளதாகும்) துயரமும் இல்லையோ? (இருந்தால் இங்கு மீளாது அவர் அங்கே தங்கார்)

சாம்பல் - பழம்பூ. குரீஇ - குருவி. உணங்கல் - (ஆகுபெயர்) உலரவைத்த பொருள். மாந்தல் - உண்ணல், இது குடித்தல் என்னும் பொருளில் மிகுதியாக வழங்கும். மன்றத்து -எருமன்று - ஊரின் நடுவிடம். 'மன்றத் தெரு' என்றும்பிரிக்கலாம். இறை-வீட்டின் இறப்பு (The eaves of a house) பள்ளி - துயிலுமிடம், தங்குமிடம். பிள்ளை-குஞ்சு, பார்ப்பு.

---

நெடுவெண்ணிலவினார்] 47 [குறிஞ்சி

இரவுக்குறிக்கண் வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தானாக, குறியிடத்துத் தான் சென்று அவனைக் கூடாமைக்குக் காரணமாக ஏற்பட்ட இடையூற்றை அவனுக்கு அறிவிப்பாளாய்த் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

(உரை). கரிய தாளையுடைய வேங்கைமரத்தின் பூக்கள் தன்மீது உதிரப்பெற்ற கற்பாறை பெரிய புலியின் குட்டியைப்போன்று தோன்றும் காட்டினிடத்து இரவில்வருபவருடைய களவொழுக்கத்துக்கு, நெடிய வெள்ளிய நிலவே, நீ நன்மைபுரிகின்றாய் அல்லை (இடையூறு செய்கின்றாய்.)

எல்லி - இராக்காலம். களவு - களவுக்கூட்டம். பாறையின் மீதுதிர்ந்த வேங்கைப்பூக்கள் புலியின் உடலின்மேலுள்ள வரிகளைப்போன்று காணப்படுமாதலின், "கருங்கால் வேங்கை புலிக்குருளையிற் றோன்றும்" என்றார்.

---

பூங்கண் உத்திரையார்] 48 [பாலை

தலைமகனது பிரிவு நீட்டித்தவழி ஆற்றாது வருந்திய தலைவியைக்கண்டு தோழி வருந்திக் கூறியது.

தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா றோம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்

இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதற் பசலை நீங்கு வண்ணம்
நசையாகு பண்பி னொருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

(உரை) 'காலைநேரத்தில் (விளையாடலைவிட்டு இவ்வாறு) துயர்கூர்ந்து செயலற்றிருப்பதைத் தவிர்ந்திடுக', என்று விளையாட்டுத்தோழியர் பலகால் கூறக்கேட்டும் (அவ்வாறு செய்யாது) இவ்விதம் மிகவுந் துன்புற்று வருந்தும் தலைமகளது பசலை நீங்கும்படி அன்பு உண்டாகத்தக்க தன்மையோடுகூடிய வொரு சொல்லை,(நங் காதலர் சென்ற சுரத்திடை) தாதைக்கொண்டு செய்தாற்போன்ற மிகக் குளிர்ந்த குராவின் மலராகிய பாவை, அவருக்குச் சொல்லாதோ?

பாவை - பாவைபோன்ற குராமலர் - 'நறும்பூங் குரவம் பயந்த செய்யாப் பாவை (ஐங்குறு 344) என்றார் பிறரும். கையாறு - கையற்றிருத்தல், செயலற்றிருத்தல். ஓம்பு- நீக்கு, பரிகரி. ஓரை - விளையாட்டுமகளிர். ஆயம் - தோழியர்கூட்டம். இனை - இனைதல், வருந்துதல் (முதனிலைத் தொழிற்பெயர்). நன்னுதல் (அன்மொழித்தொகை) நல்ல நுதலை உடையவள். நசை - ஆர்வம், அன்பு. ஒருசொல் "நீ அவளை விரைந்துசென்று வரைந்துகொள்" என்ற ஒரு சொல்.

அம்மூவனார்] 49 [மருதம்

பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் ஊடியிருந்த கிழத்தியினூடலை ஒருவாறு உணர்த்திப் பள்ளியிடத்துக் கூடலுற்றபோது அவள் நொந்து கூறியது.

அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரெங் கணவனை
யானா கியர்நின் னெஞ்சு நேர்பவளே.

(உரை). அணிலின் பல்லைப்போன்ற முட்களையுடைய வாசனைமிக்க கழிமுள்ளிமலர்களையும், நீலமணியின் நிறத்தைப்போலக் கரியநீரையும் உடைய சேர்ப்ப, இப்பிறப்பு நீங்கி எய்தும் மறுபிறப்பிலாயினும் நீ எனது கணவனாகுக, நான் நினது மனதுக்கிசைந்த மனைவி ஆகுக.

முண்டகம் - கழிமுள்ளி; கடற்கரையில் உள்ளதோர் பூஞ்செடி. மணி - நீலமணி. கேழ் - நிறம். மா - கருமை. கணவனை - ஐ, சாரியை.

"நான் உன் மனதுக்கினிய காதலியாகவும், நீ முழு அன்பையும் என்னிடத்து வைத்துள்ள கணவனாகவும், இருவரும் இடையீடின்றி இன்புற்றுவாழும் பாக்கியத்தை இப்பிறவியில் யான் பெற்றிலேன்; அடுத்த பிறப்பிலேனும் அப் பெரும்பேற்றைப் பெறுதற்குரியவ ளாகக்கடவேன் யான்", என்று தலைவி நொந்து கூறியதாம்.

குன்றியனார்] 50 [மருதம்

பரத்தைமாட்டுப் பிரிந்துவந்த தலைமகனுக்கு வாயிலாக வந்தார்க்குக் கிழத்தி, தனது மெலிவுகூறி வாயில் நேர்ந்ததைக் குறிப்பால் உணர்த்தியது.

ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வி மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே; இறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

(உரை). புலிநகக் கொன்றைமரத்தின் வெண்சிறு கடுகைப்போன்ற சிறியபூக்கள் அழகிய மருதமரத்தின் பழம்பூவோடு பரந்து அவரது ஊரிடத்து நீர்த்துறைகளை அழகு செய்தன; (ஆனால்) அவர் தழுவிய எனது தோள்களோ, விளங்கும் வளையல்கள் முன்கையினின்று நீங்கி நழுவும்படி மெலிந்து தனிமையுற்று(ப் பொலிவற்றன).

'சிறுவீ ஞாழல்' என்பதை 'ஞாழற் சிறுவீ' என மாற்றிக் கொள்க. செம்மல் - பழம்பூ. தாஅய் - பரந்து. இறை - முன்கை. இறந்து - கடந்து, நீங்கி. சாஅய் - மெலிந்து. புலம்பு - தனிமை. புலம்பு அணிந்தன்று, 'அணிந்தன்று' என்பது 'அழகு செய்யவில்லை' என்னும் பொருளில் வந்த குறிப்புமொழி.

இறைச்சி:—'ஞாழலின் புதுப்பூக்கள் மருதின் பழம்பூக்களோடு கலந்து பரந்து நீர்த்துறைகளை அழகுசெய்யும் ஊரன்' என்றமையால் 'பரத்தையரோடு கூடிச் செவ்வியழிந்துவந்த தலைமகனுடன் செவ்விகுலையாத தான் கூடிப் பொலிவள், என்று குறித்தவாறும்.

குன்றியனார்] 51 [குறிஞ்சி

வரைந்துகொள்ள இசையாது களவொழுக்கம் புரிந்துநின்ற தலைமகன் சிறைப்புறத்தானாக, அவனை வரைவுகடாவ வேண்டித் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாள்போன்று அவனுக்கு உணர்த்தியது.

கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நூலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரிக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலேன்; யாயுநனி வெய்யள்;
எந்தையுங் கொடீஇயர்; வேண்டும்
அம்ப லூரும்; அவனொடு மொழிமே.

(உரை) வளைந்த முட்களையுடைய கழிமுள்ளியின் மிகக் குளிர்ந்த பெரிய மலர்கள் காற்றினாற் சிதறுண்டு, கோத்த நூலறுபட்டுச் சிந்திய முத்துக்களைப்போல, நீர்த்துறைகள் தோறும் சூழ்ந்துகிடக்கும் வெள்ளிய மணலையுடைய கடற்கரையை உடைய தலைவனிடத்து யானோ (நீங்காத) காதல் கொண்டவளாக இருக்கின்றேன்; என் தாயும் மிகக் கொடியவள்; என் தந்தையும் கொடியவர்; ஊரிலுள்ளாரும் அம்பல் மொழிதலை விரும்பி உரைக்கலுற்றார்; இவற்றையெல்லாம் அவனுக்குச் சொல்வீராக. (சொல்லி வரைவு கடாவுவீராக).

காலொடு-காலினால் (உருபுமயக்கம்) பரிக்கும் - சூழும். அம்பல்-சிலர் அறிந்து தம்முள்கூறும் பழிச்சொல்; இதுவே பலரறிந்து பரக்கக் கூறப்படுமாயின் அலர் எனப்படும்.

தன்னை முன்போல வெளிப்போகவிடாது வீட்டின்கண்ணே செறித்தமையால் 'யாய் நனி வெய்யள்' என்றும், தந்தை முதலியோர் தமதுகுடிக்குப் பழிப்பாகும் களவொழுக்கத்தை அறிந்தால் தலைமகனுக்கு யாதேனும் பெருந்தீங்கு இழைப்பாராதலின் 'தந்தை கொடியர்' என்றும், தமது களவொழுக்கம் சற்று வெளிப்பட்டு அம்பல் விளைக்கலாயிற்று என்றும், இவற்றையெல்லாம் அறிந்துவைத்தும் அவனிடத்து எனக்குள்ள காதலோ ஒழியவில்லை என்பாள் 'யானும் காதலேன்' என்றும் கூறினாள் என்க.

இறைச்சி:—காற்றாற் செலுத்தப்பட்டு முண்டகமலர்கள் துறைதொறும் பரந்தாற்போல, தம் களவு வெளிப்பட்டுக் கொடியார் தூற்றும் அலர்மொழிகள் ஊரெங்கும் பரவலாயிற்று என்று குறித்ததாம்.

பனம்பாரனார்] 52 [குறிஞ்சி

தலைமகன் பிரிவிடைத் தலைமகளது வேறுபாட்டைக் கண்டு அதன் காரணத்தை அறியவேண்டித் தாய்மார்



வேலனைக்கொண்டு வெறியாட்டுஅயர்விக்க லுற்றபோது, உண்மை வெளியாகிவிடுமோ என்று நடுங்கிய தலைமகளைத் தோழி தேற்றியது.

ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
கூரசைந் தனையையாய் நடுங்கல் கண்டே,
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
விரிந்திலங் கு வெண்பல் மடந்தை,
பரந்தென னல்லனோ இறையிறை யானே.

(உரை). கடல்திரைகள் ஓயாது நாற்புறமும் மோதும் கடலினிடையே விளங்கும் மலையைப்போல மிகவுங் கலங்கி நீ நடுங்குதலை நோக்கி, கஸ்தூரிகமழும் திரண்ட கரிய கூந்தலையும் விரிந்து விளங்கும் வெண்மையான பற்களையும் உடைய நங்காய், சிறிது சிறிதாய் உண்மையை (உனது தாயர்க்கு நான் உணர்த்தி வெறிவிலக்கிவிட்டேன் அல்லனோ

மிதித்த - மோதிய, தாக்கிய கூர் - மிகுதி. நரந்தம்-கஸ்தூரி, ஒருவகை நறுமணப்புல்லுமாம். குவை - கூட்டம் திரட்சி மடந்தை - அண்மைவிளி. பரந்தனென் - உண்மையைப் பலரும் அறியுமாறு பரவச்செய்தேன். இறை இறை கொஞ்சங் கொஞ்சம்.

# ஆச்சரிய சூடாமணி

189102

[334-வது பக்கத் தொடர்ச்சி.]

## 6. கணையாழி அங்கம்

கையில் மோதிரத்துடன் (அநுமான் வருகிறான்)

அநுமான்:—நாககன்னியரின்புறற்கு உதவிசெய் வாரிதிநண்பனாய மைனாக வரையைக்கடந்து, வானின் மெலிந்துரிந்த தோல்போன்ற முகிற்குலம் முடுகி என்னைப் பின்தொடர, தன் தேவிபால் இவ்வாழி கொண்டேகெனத் தொட்ட இராம பாணம்போல், என் தந்தை வாயுவும் வியக்குமொரு விரைவொடு இவ்விலங்கை வந்து எய்தினேன்................ சிஞ்சுபத்தரு நிழலில் சீதை வைகுகின்றாளெனக் கழுகின்வேந்தன் சம்பாதி குறித்த அப் பொழில் எவ்வயின் உளதோ?.........(சுற்றிப்பார்த்து)...... ஆ! இந்திருதர்தம் நகரின் வனப்புச் சாலச் சிறந்ததே. பொன்னாடு வறிதாக, மனங்கவர் உயர்பொருள்கள் யாவையும் இராவணன் கொணர்ந்து இவ்விலங்கையிற் சேர்த்துவிட்டனன் என்பதற் கையமில்லை. .........(உவகையுடன்)........யான் நாடிவந்த நந்தனவனமும் இதுவே போலும். தருமலர்த் தாது கோதித் தண்ணலை வாவிதோய்ந்து என்றன் தந்தையாம் மாருதன், அந் நந்தனவனம் இதுவேயென்ன, பருகியநறவினால் மயங்கிமுரல்கின்ற வண்டுகளின் இனியகுரல்கொண்டு கூறுகின்றான். ஆதலின் இதனகம் ஏகுவேன்......(புகுந்துபார்த்து வியப்புமிகுந்தவனாய்)......குழைகளோ வெண்பட்டு, தழைகளோ மரகதம், முத்துமலர்கள், முளைகளோ பளிங்கு, பழங்களோ பவளம், செம்பொற் சினைகள்—எம்மரங்களோ இவை! வனங்களில் திரிந்துவாழும் மான்களே இவைகளைக் கண்டிரா.........இது யாவதாயின் எனக்கென்! யான் பூண்டுள கருமமோ வேறு பொறுப்புளது......சம்பாதி செப்பிய சூழல் இதுவே...... மற்றுச் சிஞ்சுபமரம் எங்குளது?......(சுற்றி நோக்கி) .........இதோ இதோ உளது அத்தரு...(களிப்புடன் அருகிற் சென்று)......சீதையைக் காண்கிலேனே.........(சிறிது மூர்ச்சித்துப் பிறகு ஒருவாறு தெளிந்து)......வல்லரக்கன் மாய்த்தானோ!...மெல்லியலாள் தானேயாய் இன்னுயிரைத் துறந்தாளோ! ...கடலை யான் கடந்ததெல்லாம் வீண். சுக்கிரீவனது எண்ணம்பயனற்றதாயிற்று கணையாழியைக்கொண்டு போய் இராமன்பால் என்னென்று கொடுப்பேன்! சீதையை இழந்தபின்னர் இராமன் இனித் தன்னுயிர் தரிக்கமாட்டான். சுக்கிரீவன் பரதன் இலக்குவன் முதலியோரும், அரசியர் ஏனையோரும், வாளா மீண்டு வறிதே புகுரும் என் பார்வையால்.........! யானேயன்றோ இத்தனைக்குங் காரணம். தலைவன்பாற் சென்று பொய்யோ புகல லாகாது.........ஆதலின் யானும் ஆவன இயற்றிப் பின்னர்ப் புகழுடம்பே எய்தப்பெறுவேன்.

(திரைக்குள்:—இறைவாவோ, இந்துவே)

அநு:—என்ன விது! என்ன விது!

(மறுபடியும் திரைக்குள்:—தேவனே, தங்களை வணங்குகின்றேன். பன்னெடும் நாட்களுக்குப்பின் இன்றே என் கண்களுக்குத் தென்பட்டிருக்கின்றீர்)

அநு:—அவலக் குரலன்றோ விது! இப் பொதும்பரில் ஒளிந்திருந்து மேல் நிகழ்வன நன்கு நோக்குவேன். (ஒளிந்துகொள்கின்றான்).........சீதையும் இதோ இருக்கின்றாளே. பூமியிற் பன்முறை புரண்டு புரண்டு படிந்தவப் புறாப்பெடையின் கழுத்துப்போற் பசிய புழுதியானது கண்ணிருந்து வழிந்த நீரொடு சேறாகி, வெளுத்த அவள் இரு தனங்கள்மிசைச் சந்தனக் குழம்புபோல் படிந்திருக்கின்றது. புலம்புமிம் மொழிகளை அவள் நாயகற்குக் கையுறையாகக் கொண்டுசெல்லச் சிறிதுபோது யான் கேட்டிருப்பினுந் தகும்.

அழுதவண்ணமாய்ச் சீதை வருகின்றாள்.

சீதை:—வெண்மதியே, யானுன்னை எள்ளினேன் போ! அரசர்க்கு நீ அண்மியனென்று மறைகளோ முறையிடுகின்றன. சான்றவன் என்றுன்னை இவ்வுலகத்தார் என் கொழுநனோடு சேர்த்துரைத்துக்கொண்டாடுகின்றனர். இஃதெல்லாம் பொய். என்னையோ நீ பெரும் பித்தி யாக்கினாய். வைகலும் வெவ்வேறு மனைவியரை விரும்பித் தழுவுகின்ற செய்கையன் நீ. என்னருந் தனிநாயகனோ புன்வினையே னென்னையே உகப்பார்......ஒருபுறத்தா லென்னையும் மறுபுறத்தால் என் நாயகனையும் நோக்குகின்றாயானாலும் ஒன்றுங் கூறாது நீ யாதுந் தொடர்பற்றவன்போல் போதல் ஒண்ணுமோ!

அநு:—(தனக்குள்) இவள் புலம்பி முடிந்தபின் யான் அவளெதிர் செல்வேன்.

சீதை:—ஈங்கிவர் இருடியர் எழுவர். இவரன்றே, ரகுகுல குருவார் வசிட்டமுனிவர். கற்பிற்கெல்லாங் குறிக்கோளாய அருந்ததியா ரல்லரோ இவர். பெருந் தகையீர், அரக்கரிடையே அகப்பட்ட எனக்கோ ருபாயம் உரைக்காம லிருக்கின்றீரே!.........நும்மைத் தரிசித்தும் பயனில்லை யென்னும்படி இங்ஙனே யான்.

அநு:—அரசி, அதனை இடையே தடுப்பதற்கு யானுளேன்.

சீதை:—இக்குரல் எங்கிருந்து புக்கது! (மறுபுறம் பார்த்து)...இந் நேமிவாளப் பெடை நிசியெனும் நிருதனல் பிரிப்புண்டு உதவியின்றி என்னைப்போல் கலுழ் கின்றதோ?

அநு:—இறைவி, தமக்கு உதவி இல்லையென்ன லாகாது. தங்கள் பூசனைக்குரிய கழலோன் இராமனே நும்மொழிகளைக் கேட்கின்றான்.

சீதை:—என்னிது! யான் இகழ்ந்தவத் தேவர்தம் அருளோ! மற்று அரக்கர் மாயையுள் ஒன்றேயோ!

அநு:—அன்னாய், அயிர்க்கவேண்டா, மாபெரு மனு குல தீபமாய இராமதூதன் யான்.

சீதை:—இனிய சொல்லினன் இவன் நிருதனே வாகான். புற்றிலிருந்து முத்துமாலை தோன்றமோ!

அநு:—தலைவி, இதோ, காங்குவித்துத் தங்களை வணங்குகின்றேன்.

சீதை:—உன் உருவத்தினை முதலில் தெரிவிப்பாய். மரப்பொந்துநின்று புறம்போந்து நில்.

அநு:—நும் பணி இயற்றினேன். வணங்குகிறேன்

சீதை:—(நன்கு நோக்கி) இஃதோர் குரங்கன்றே! பெரும்பாலு மரக்கர் இவ்வுரு எடுக்கமாட்டார்.

அநு:—உலகெலாந் தொழுங் கங்கைமாநதி, பனியிற்குளிர்ந்த வெள்ளி மால்வரையையும், நதிகளுக்குப் பதியான சமுத்திரத்தையுந் தூயதாக்குவதுபோல் தாங்கள், மிதிலாபுரிவேந்தன் நும் தந்தையையும், அரசமுனிகுல திலகனான நுங்கணவன் இராமனையும் புனித ராக்குகின்றீர்.

சீதை:—(தனக்குள்) இனிப்புறப் பேசுகின்றான் இவன் யாவனோ! அவனையே கேட்டறிவேன்...... பின் சோதிக்கவெனில், கட்டளைக்கல்லாக ஆச்சரிய சூடாமணிதான் இருக்கின்றதே .... (வெளிப்படையாக)...உன் வரலாற்றை விரித்துரை. மங்களமுடையோய், நீ யாவன்? கோமக னுறவினை நீ எவ்வாறு கொண்டனை?

அநு:—தலைவி! கேட்டருள்க! நான் வாயுகுமாரன்; சுக்கிரீவனுக்கேவலாளன்; என்பெயர் அநுமான்.

சீதை:—பிறகு - பிறகு?

அநு:—பிறகு, சுக்கிரீவனுக்குத் தன் தமையனான வாலியோடு மனைவி பூமி இவைகளின் காரணமாகப் பகை ஏற்பட்டது.

சீதை:—அதன்பிறகு?

அநு:—ஆகையால் அச் சுக்கிரீவன் வாலியின் பயத்தால் நாற்புறங் கடல்சூழ்ந்த இவ்வுலகை ஒட்டைச் சாண் அங்குல முள்ளதைப்போல் சுற்றித்திரிந்தான்.

சீதை:—அதன்பிறகு?

அநு:—மதங்கமுனிவர் சாபத்தால் வாலிபய மற்ற மாலியவா னென்னும் மலையிலிருந்தான் சுக்கிரீவன்.

சீதை:—அதன்பிறகு?

அநு:—அவ்வாறிருக்கும்பொழுது இந்தச் சில வாணுளுடைய அரக்கன் தங்களை இந் நிலைமைக்குக் கொண்டுவந்தான்.

சீதை:—அதன்பிறகு?

அநு:—பிறகு, எமதிறை இராமன் கடல்போலத் தீரமுடையனாயினும் காரணத்தின் வன்மையால் பயந்தான்.

சீதை:—பிறகு-பிறகு?

அநு:—பிறகு, இறந்தவச் சடாயுவின் உறுதியால் இராமன் தம்பியுடன் தங்களைத் தேட மலைகடோறும் காடுகடோறும் திரிந்து திரிந்து தன் திருவடியால் அத்தலங்களைத் தூய்மையாக்கினான்.

சீதை:—பிறகு-பிறகு?

அநு:—பிறகு, ஓர் அடவியின் நடுவில் வாலியின் ஒற்றரோ அவரென்று சோதிக்கச் சுக்கிரீவன் கட்டளைப்படி வந்த யான் ராமனைக் கண்டேன்.

சீதை:—உண்மையா! உன் கண்ணினலா?

அநு:—சீமாட்டியே! ஆம்.

சீதை:—சொல். கோமகன் எத்தகையன் சொல்?

அநு:—அம்ம! கேட்டருள்வீர். தொழுகழல் இராமன் திருவடிகளில் சங்கு சக்கிர ரேகைகளுண்டு. மேலெழுவிரல்களின் அழகியநகங்களும் வலிமையான கணுக்காலு முடையவன். சிற்றிடையன், இந்திரநீலக் கற்போன்று ஸ்ரீவத்ஸமென்னும் மறுவுடை மார்பன். அவனிருகைகளும் அரவம்போல் நீண்டன. தாமரை போன்ற கண்களும் முழுமதிபோல முகமும் அமையப்பெற்றவன்.

சீதை:—இந்நேரம் யானென் கொழுநனைக் கண்முனே காண்பேன்போ லாகின்றது. பிறகு, பிறகு?

அநு:—பிறகு, அப்பொழுது தலைவனான இராமன் மணியொளிச் சிலம்பைக் கண்ணீரால் நனைத்துக் கையிலுந் தன் தலைமீதும் அணிந்துகொண்டு "ஏ! கமலாக்ஷி! நீ எங்குச் சென்றனை" என்று காட்டிற் புலம்பிக்கொண்டு மாரனுக்குட்பட்டு வருவதைக் கண்டேன்; விரிவாகக் கூறலானேன். நுந்தம் காலணியே நம்பியின் உறுப்பிற்கெல்லாம் அணிகலனாயிற்று.

சீதை:—எனதென்று உனக் கெப்படித்தெரிந்தது?

அநு:—நேரிற் பார்க்காதவைகளுக்கு இலக்குமணனே சான்று.

சீதை:—நன்று, அதன்பிறகு.

அநு:—பிறகு மரகதப் பச்சைபோ லொளிபெற்ற வண்டுகள் மொய்க்கும் மரக் கூட்டங்களும், அருவி வீழ் சாரல்களும், வழிச் செல்வார்க்குத் துணையான பம்பையின் அலைக்காற்றும், உன்குணங்கள் கவரும் பொழுது ராமனை ஒருகணமும் தம்வசமாக்க வலிமையற்றன.

சீதை:—பிறகு-பிறகு,

அநு:—அம்மா! அரசன், உனக்குத் தூதனுப்ப வேண்டி, பெடைக்குப் பாசி கொடுக்கும் ஆண் சக்கரவாளத்தினிடமும், தாமரைத்தேன் பருகும் வண்டினிடமும், தாமரைக்கிழங் ககழ்ந்துண்டுவக்கும் அரசவன்னத்தினிடமும் செல்லலாயினன்.

சீதை:—அதன்பிறகு?



# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்—1. மந்திரப்படலம்.

[338வது பக்கத் தொடர்ச்சி]

மாறு மரபினர் மன்னனோடு மைந்தர்.

1. பழுதிலா மாதவன், சான்றோன் எனமொழிந்த அப் புகழுரைகளுக்கு இலக்காகிய திருமகன், அறுபதினாயிர மாண்டுகள் அருந்தவங் கிடந்தபயனாய்ப் பிறந்தவன்றிலும்,எண்ணிலார் புரங்கள் மூன்றும் எரியுணச்சிரித்தவப் பிஞ்ஞகன்பிடித்தவில்லை இற்றவன்றிலும், இருபத்தொருபடிகால்வரை மன்னரைக் குருதி கொப்புளிக்குமாறு ஆட்டங்கண்ட எறிமழுவாளனை வென்றொழித்த வன்றிலும், பெரியதோர் உவகையன் தயரதன் ஆயினன். அஃதொன்று மட்டுமேயன்றி, வான்மீகத்தில் தன்முன் உரைத்தவைகளைக் கேட்டிருந்தஅம்மன்னன், ஒன்றும் வருந்துதற்கிடமின்றி இங்கு வசிட்டமுனிவன் வழங்கிய மொழிகளின்மேன்மையை நோக்கியும் மகிழ்ந்தனனென, முனிவனது மாமலர்ப் பாதங்களை முறைமையி னிறைஞ்சி,

இனிய சோல்லினை யெம்பெரு மானருள் விழியின்
தனிய ணிலங் தாங்கிய தவற்கிது தகாதோ

வென அவனது இனியசொல்லினை எடுத்து மிகப் பாராட்டுவது ஆழ்ந்த குறிப்புடையதாம் பின் அம் முனிவனுக்கு எதிர்முகமன் விளம்புவானாய்,

எந்தை நீ உவந்து இதம்சொல எம்குலத்து அரசர்
அந்த மில்லரும் பெரும்புகழ் அவனியில் நிறவி
முந்து வேள்வியும் முடித்துத்தம் இருவினைமுடித்தார்
வந்தது அவ்வருள் எனக்கும் என்று உரைசெய்து
[மகிழ்ந்தான்.

மன்னவன் காவலின் ஆணையின் கடவுளாம் எனும் வசிட்டன் இவ்வண்ணம் இனிய சொற்களால் இதமுறச் சொல்லி மகிழ்வித்துத் தன் அநுமதி தந்த பின், மந்திரக்கிழவர்தம் சார்பாகச் சுமந்திரன்,

உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு நின்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பதும் வழக்நன்
றறத்தினூங்கினிக் கொடிதென லாவதொன்றிபாதோ

[இராமனுக்கு இவ்வரசு மிகவும் ஏற்றதாகும் என்று உவகைகொள்கின்ற எங்கள் மனத்தை, இதனால் நீ பிரிகின்றாய் என்ற சொல் உடனே சுடுகின்றது உன் குலத்து முன்னோர் மறவாத தருமத்தை நீ மறந்துவிடுவதென்பதும் முறைமையாகாது. ஆதலின், அவரவர் கடமையைச் செய்வதைவிடக் கொடியது வேறுஒன்று எது இருக்கின்றது]

எனத் தயரதனைப் பிரிதற்குத் தாமுற்ற ஆற்றாமையை அரிதின் இயம்பினான். 'இராமனுக்கு நீ அரசு தந்தால் அவனுக்கு அது தகும்' என்பதில், "நின்னின்று நாங்கள் அடையாத நன்மையை அவனால் அடையப் போகின்றோம்" என்ற பொருளில்லை. "நின் முன்னையோர்தம் தருமமுறைப்படி நீ துறந்தகன்று தவம்பூண வேண்டியது இன்றியமையாததே யாகின்றது. அதனை மறுப்பதற்கோ யாங்கள் உரியரல்லேம்; நினது அறத்தை நீ கடைபிடிப்பதால் எங்கள் மனம் உளையலாகின்றதற்குத்தான் நோகின்றோம்" என்னும் பொருளுடைய இப்பாசுரத்தில், "உன்னுடைய மரபிற்கும் உறுதிக்கும் உரிய இதனைச் செய்யுங்கால் நாங்கள் தடுக்கமாட்டோம்; நின்பின் அரியணை அமரகிற்கும் இராமனும் தகுதியுள்ளவனாதலால், உன்னைத் தடுப்பதற்கோர் நியாயமும் காணலரிது" என்ற கருத்து அடங்கியிருக்கின்றதே யன்றி "எங்களுடைய நன்மைக்காக இக்ஷணமே நீ இராமனை அரசனாக்குவாய்" என்ற விதி பொதிந்திருக்காத நேர்மை பாராட்டற்பாலது. இன்னபடி ஏற்ற சொல் வகையறிந்த முன்னுரையைத் தொடர்ந்து,

புரசை மாகரி நிருபர்க்கும் புரத்துறை வோர்க்கு
முறைசெய் மந்திரக் கிழவர்க்கு முனிவர்க்கு முள்ள
முரச மார்ப்பநின் முதன்மணிப் புதல்வனை முறையா
லரச ணுக்கிப்பின் னப்புறத் தடுத்தது புரிவாய்

[கழுத்துக் கயிறுடைய பெரிய யானைச்சேனைகளையுடைய அரசர்களுக்கும், இந்நகர மாந்தர்களுக்கும், இதனை உரைக்கின்ற அமைச்சர்களுக்கும், முனிவர்களுக்கும் அவரவர் இதயமே முரசுபோல் அடித்து ஒலிக்க, நின் நீலமணியனைய மேனியுடைய மூத்தபுத்திரனை முறைப்படி அரசனாக்கிப் பிறகு அதற்கடுத்ததாய் உனக்கு ஏற்றதைச் செய்துகொள்வாய்]

எனச் சுமந்திரன் தொழுது கூறினான். "இராமனை யரசனாக்கிய பின்னர் நீ துறந்தகலலாம்" என்று தன் நாவா லுரைக்கக்கூசிய இம் மந்திரக்கிழவன் "அப்புறத்து அடுத்தது புரிவாய்" என்னுஞ் சொற்களால் அக்கருத்தைக் குறித்தனன். இராமனை அடவியுள் போக்குதல் என்று மொழியலாற்று மன்னவன் பின் கைகேசியை, "பெறுவாயேல், மண்ணைகொள் மற்றைய தோன்றை மற" என வேண்டியதும் நல்லதல்லாததை நவில்தற் குடன்படா நாநயத்தினைச் சார்ந்ததாகும். "அப்புறத் தடுத்தது புரிவாய்" என்ற மொழியினுள் அழுந்தியபொருளை உளங்கொண்டு மன்னவன் இளநகை யரும்பியிருத்தல் வேண்டும். "அப்புறத் தடுத்தது புரியவோ, சுமந்திர, இதனை நீ மொழிந்தாலென், மொழியா தொழிந்தாலென்; என் மணிப்புதல்வனை முறையால் அரசனாக்க வேண்டுவீரெனின், அப்புறத்தடுத்தது தானே புரியலாகின்றது. நீ இதனைக் கூறினுயலை யாயினும், அக்குறிப் பெழுவதின்றிக் காக்கலா வருநிலை இது, நீ யென்செய்வாய்" என்னுத் தயரதன் எதிர் இயம்பின னல்லனேனுந் தன்னகத்தே யுன்னினன் போலும். இவ்வாறன்னிய இரகசியத்தை,

என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை நளிமுடி சூட்டி
நின்று நின்றது செய்வது விரைவினி னீயே
சென்று கொணடனை திருமகண் கொழுநனை
[யென்றான்.

[என்ற வார்த்தையைச் சுமந்திரன் சொல்லவும், தயரதன், 'நன்றாகச்சொன்னாய், இராமனுக்குப் பெருமைபொருந்திய கிரீடத்தைச் சூட்டிவிட்டு, அதற்கடுத்தபடி எஞ்சியதையும் விரைவினிற் செய்வோம். அதற்கு, நீயே சென்று திருமகளனைய சீதைக்கு நாயகனை அழைத்துவா" என்றான்]

என்ற பாசுரம் பகர்கின்றது. "சுமந்திர, இராமனுக்கு முடிசூட்டுவதோடு நிற்காமல் அதற்கப்புறம் செய்ய

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்—1. மந்திரப்படலம்.

[338வது பக்கத் தொடர்ச்சி]

மாறு மரபினர் மன்னனொடு மைந்தர்.

பழுதிலா மாதவன், சான்றோன் எனமொழிந்த அப் புகழுரைகளுக்கு இலக்காகிய திருமகன், அறுபதினாயிர மாண்டுகள் அருந்தவங் கிடந்தபயனைப் பிறந்தவன்றிலும், எண்ணிலார் புரங்கள் மூன்றும் எரியுணச்சிரித்தவப் பின்னகன்பிடித்தவில்லை இற்றவன்றிலும், இருபத்தொருபடிகால்வரை மன்னரைக் குருதி கொப்புளிக்குமாறு ஆட்டங்கண்ட எறிமழுவாளனை வென்றொழித்த வன்றிலும், பெரியதோர் உவகையன் தயரதன் ஆயினன். அஃதொன்று மட்டுமேயன்றி, வான்மீகத்தில் தன்முன் உரைத்தவைகளைக் கேட்டிருந்தஅம்மன்னன், ஒன்றும் வருந்துதற்கிடமின்றி இங்கு வசிட்டமுனிவன் வழங்கிய மொழிகளின்மேன்மையை நோக்கியும் மகிழ்ந்தனனென, முனிவனது மாமலர்ப் பாதங்களை முறைமையி னிறைஞ்சி,

இனிய சொல்லினை யெம்பெரு மானருள் விழியின்
தனிய ளுனிலந் தாங்கிய தவற்கிது தகாதோ

வென அவனது இனியசொல்லினை எடுத்து மிகப் பாராட்டுவது ஆழ்ந்த குறிப்புடையதாம் பின் அம்முனிவனுக்கு எதிர்முகமன் விளம்புவானாய்,

எந்தை நீ உவந்து இதம்சொல எம்குலத்து அரசர்
அந்த மில்லரும் பெரும்புகழ் அவனியில் நிறவி
முந்து வேள்வியும் முடித்துத்தம் இருவினை முடித்தார்
வந்தது அவ்வருள் எனக்கும் என்று உரைசெய்து
[மகிழ்ந்தான்.

மன்னவன் காவலின் ஆணையின் கடவுளாம் எனும் வசிட்டன் இவ்வண்ணம் இனிய சொற்களால் இதமுறச் சொல்லி மகிழ்வித்துத் தன் அநுமதி தந்த பின், மந்திரக்கிழவர்தம் சார்பாகச் சுமந்திரன்,

உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு நின்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பதும் வழக்கன்
றறத்தி னூங்கினிக் கொடிதென லாவதொன்றியாதோ

[இராமனுக்கு இவ்வரசு மிகவும் ஏற்றதாகும் என்ற உவகைகொள்கின்ற எங்கள் மனத்தை, இதனால் நீ பிரிகின்றாய் என்ற சொல் உடனே சுடுகின்றது உன் குலத்து முன்னோர் மறவாத தருமத்தை நீ மறந்துவிடுவதென்பதும் முறைமையாகாது. ஆதலின், அவரவர் கடமையைச் செய்வதைவிடக் கொடியது வேறுஒன்று எது இருக்கின்றது]

எனத் தயரதனைப் பிரிதற்குத் தாமுற்ற ஆற்றாமையை அரிதின் இயம்பினன். 'இராமனுக்கு நீ அரசு தந்தால் அவனுக்கு அது தகும்' என்பதில், "நின்னின்று நாங்கள் அடையாத நன்மையை அவனால் அடையப் போகின்றோம்" என்ற பொருளில்லை. "நின் முன்னையோர்தம் தருமமுறைப்படி நீ துறந்தகன்று தவம்பூண வேண்டியது இன்றியமையாததே யாகின்றது. அதனை மறுப்பதற்கோ யாங்கள் உரியால்லேம்; நினது அறத்தை நீ கடைபிடிப்பதால் எங்கள் மனம் உளையலாகின்றதற்குத்தான் நோகின்றோம்" என்னும் பொருளுடைய இப்பாசுரத்தில், "உன்னுடைய மரபிற்கும் உறுதிக்கும் உரிய இதனைச் செய்யுங்கால் நாங்கள் தடுக்கமாட்டோம்; நின்பின் அரியணை அமரநிற்கும் இராமனும் தகுதியுள்ளவனாதலால், உன்னைத் தடுப்பதற்கோர் நியாயமும் காணலரிது" என்ற கருத்து அடங்கியிருக்கின்றதே யன்றி "எங்களுடைய நன்மைக்காக இக்ஷணமே நீ இராமனை அரசனாக்குவாய்" என்றவிதி பொதிந்திருக்காத நேர்மை பாராட்டற்பாலது. இன்னபடி ஏற்ற சொல் வகையறிந்த முன்னுரையைத் தொடர்ந்து,

புரசை மாகரி நிருபர்க்கும் புரத்துறை வோர்க்கு
முரைசெய் மந்திரக் கிழவர்க்கு முனிவர்க்கு முள்ள
முரச மார்பகின் முதன்மணிப் புதல்வனை முறையா
லரச னாக்கிப்பின் னப்புறத் தடுத்தது புரிவாய்

[கழுத்துக் கயிறுடைய பெரிய யானைச்சேனைகளையுடைய அரசர்களுக்கும், இந்நகர மாந்தர்களுக்கும், இதனை உரைக்கின்ற அமைச்சர்களுக்கும், முனிவர்களுக்கும் அவரவர் இதயமே முரசுபோல் அடித்து ஒலிக்க, நின் நீலமணியனைய மேனியுடைய மூத்தபுத்திரனை முறைப்படி அரசனாக்கிப் பிறகு அதற்கடுத்ததாய் உனக்கு ஏற்றதைச் செய்துகொள்வாய்]

எனச் சுமந்திரன் தொழுது கூறினன். "இராமனையரசனாக்கிய பின்னர் நீ துறந்தகலலாம்" என்று தன் நாவா லுரைக்கக்கூசிய இம் மந்திரக்கிழவன் "அப்புறத்து அடுத்தது புரிவாய்" என்னுஞ் சொற்களால் அக்கருத்தைக் குறித்தனன். இராமனை அடவியுள் போக்குதல் என்று மொழியலாற்ற மன்னவன் பின் கைகேசியை, "பெறுவாயேல், மண்ணேகொள் மற்றைய தோன்றை மற" என வேண்டியதும் நல்லதல்லாததை நவில்தற் குடன்படா நாநயத்தினைச் சார்ந்ததாகும். "அப்புறத் தடுத்தது புரிவாய்" என்ற மொழியினுள் அழுந்தியபொருளை உளங்கொண்டு மன்னவன் இளநகை யரும்பியிருத்தல் வேண்டும். "அப்புறத் தடுத்தது புரியவோ, சுமந்திர, இதனை நீ மொழிந்தாலென், மொழியா தொழிந்தாலென்; என் மணிப்புதல்வனை முறையால் அரசனாக்க வேண்டுவீரெனின், அப்புறத்தடுத்தது தானே புரியலாகின்றது. நீ இதனைக் கூறினையல்லை யாயினும், அக்குறிப் பெழுவதின்றிக் காக்கலா வருநிலை இது, நீ யென்செய்வாய்" என்னுத் தயரதன் எதிர் இயம்பின னல்லனேனுந் தன்னகத்தே யுன்னினன் போலும். இவ்வாறன்னிய இரகசியத்தை,

என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை நளிமுடி சூட்டி
நின்று நின்றது செய்வது விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகண் கொழுநனை
[யென்றான்.

[என்ற வார்த்தையைச் சுமந்திரன் சொல்லவும், தயரதன், 'நன்றாகச்சொன்னாய், இராமனுக்குப் பெருமைபொருந்திய கிரீடத்தைச் சூட்டிவிட்டு, அதற்கடுத்தபடி எஞ்சியதையும் விரைவினிற் செய்வோம். அதற்கு, நீயே சென்று திருமகளனைய சீதைக்கு நாயகனை அழைத்துவா" என்றான்]

என்ற பாசுரம் பகர்கின்றது. "சுமந்திர, இராமனுக்கு முடிசூட்டுவதோடு நிற்காமல் அதற்கப்புறம் செய்ய



வேண்டியதையும் நிச்சயமாகச் செய்கின்றேன்" என்று தன் னமைச்சனோடரசன் சிறிது அசதியாடுகின்றான், என்றெண்ணுதற்கு, 'நன்று சொல்லினை' என்னுமவ் வாசகத்தின் தொனிப்பொருள் மாத்திரமல்லாமல், "நீயே நம் மைந்தனைக் கொண்டணை" என ஏவுவதும் ஆதாரமாகின்றது. "ஒளிப்பினு மொளிக்கவொட்டா ஆர்வத்தால் அலசுகின்றாய்; ஆதலின், நீயே போய்க் கோமகனைக் கொணர்ந்து விரைவினில் யாவற்றையும் முடித்துவிடு" என்னும் இங்கிதம் அவ்வேகாரத்தில் அடங்கியுளது என்னல் வேண்டும். இவ்வண்ணம் அப் பிரிநிலையேகாரத்தின் பொருள் போமளவு உய்க்குமாற்றல் தயரதனுக்கு மாத்திரமேயன்றி யவன்வயின் பிறந்த இராமனுக்குமுளது. பின்னாள், தன்னை நாடிவந்த வீடணனை வரவேற்கவோ மறுத் தகற்றவோ வெனத் தன்னுழையரோடு இராமன் மந்திரங்கூடி யாய்ந்தபோது சுக்கிரீவன், "இவன் தன் தமையனைத் துறந்தது தருமநீதி யாகுமோ; பகையுற வருதலுந் தன் தமையனைத் துறந்த பண்பிது நகையுறலன்றி நயக்கற்பாலதோ" எனப் பலபடப் பேசித் தன்னுடைய சரித்திரத்தை அறவே மறந்து, தமையனைக் காட்டித்தருமொரு தம்பியின் நட்பை மறுத்தலே தக்கதென்று வற்புறுத்தவும், இவனும் இவனேபோல் சாம்பன் அனைய பலரும் உரைத்தவைகளையும், வீடணனது வரவு நல்வரவே யென உணர்த்திய அநுமன் சொற்களையும் முடியக்கேட்ட இராமபிரான், இறுதியில் சுக்கிரீவனை நோக்கி,

......"கதிரோன் மைந்த
கோதிலா தவனை நீயே யென்வயிற் கொணர்தி'

என இந்துவெனு மவன்முகத்தில் மந்தநகை நடிக்கச் சுக்கிரீவனைப் போக்கியபரிசு மறத்தற்கொத்ததன்று. "அடுத்தது செய்யவேண்டியதை விழைகின்ற சுமந்திர, நீயே இராமனை இங்கழைத்துவா" என்று குறித்தனன் தந்தை; மகன், "என்னைக்கொண்டே உன் தமையனைக் கொல்வித்த சுக்கிரீவ, நீயேயோ இன்று வீடணனது செய்கை நீதியன்றென நெடிது பேசுகின்றாய்! நன்று நன்று, உன்னினச் செய்கையனைய அவனை நீயே சென்று அழைத்துவா" என்ற நுண்மையை ஏகாரத்தில் ஏற்றினன். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பேசுகின்ற வாசகங்கள் சில ஒத்திருக்கலாவது உண்மையாகையால் சற்றேறக்குறைய ஒரு தன்மைத்தாய இவ்விரு நிலையிலும் தயரதனும் இராமனும் ஒரேவிதம் உரைக்கின்ற இயற்கையைக் கம்பர்பிரான் உணரவைக்கின்றார்.

இவ்வண்ணம் உதிரத் துறவினோடு உரையின் தொடர்பும் ஒத்திருக்கும் வியப்பினைப் பின்னுமோர் செய்யுள் இச்செவ்விபற்றி இப்படலத்திலேயே காட்டி நிற்கின்றது. சுமந்திரன் கொண்டணைந்த இராமன் பேரரசின் நெடுஞ்சுமையைத் தான் தாங்குதற்கு இசைந்தகன்றபின் தயரதன், நிருபர்களை வரவழைத்துச் செய்தியைச் செப்ப அவர்களும் நனிமகிழ்ந்து,

மூவெழு முறைமையங் குலங்கள் முற்றுற
பூவெழு மழுவினாற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
காகவிவ் வுலகமீ தறனென் றாரரோ.

["இருபத்தொருதலைமுறை எம் அரசகுலம் அழியும்படி கூர்மைபொருந்திய மழுவினால் போர்செய்து தொலைத்த பரசுராமனது பராக்கிரமத்தை ஒடுக்கிய வீரனுக்கு இவ்வுலகம் உரிமையாக்கடவது தருமமே" என்றார்]

கேட்டனன் தயரதன். தன்னகந் துளங்கிய மகிழ்வை ஒளிக்குஞ் சூழ்ச்சியனாய்,

மகன்வயி னன்பினான் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவிப் பொய்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததோ தன்மை யென்னென்றான்.

["புத்திரனிடத்திலுள்ள ஆசையினால் மயங்கி யான் அவனுக்கு அரசளிக்க இசைந்ததாய்ச் சொல்ல, நீங்கள் அதனைத் தழுவியுரைத்த இந்தப் பொலிவுடைய வாசகங்களை, சந்தோஷ மிகுதியினாற் சொன்னீர்களோ, அல்லது என்னுடைய நோக்கத்திற் கிணங்கி இச்சகமாக இசைத்தீர்களோ, அல்லது இதுதான் தக்கது என்று நினைத்தீர்களோ, அல்லது வேறு எத்தன்மைபற்றி உரைத்தீர்கள், உரையின்" என்றனன்]

விளக்கமுடைய அறிவினாலொரு விடயத்தை வினவுமுறை இன்னது. ஒன்றன்றிப் பலவேறு காரணங்களால் ஒரு காரியம் நிகழ்ந்திருக்கக்கூடும் என எண்ணுவது தேர்ந்தபுத்தியின் தன்மை. மனத்தேர்ச்சியில்லாதார், ஒன்றினைக் கண்டவுடன், எது அவர் புத்திக்குப் படுகின்றதோ அதுவே முடிவென்று பற்றிக்கொண்டு அதன்மேலொன்றும் நினைப்பதற் கிடந்தரார். இதற்கெதிர் தாம் ஊகிக்கவல்ல காரணங்களையெல்லாம் ஓர்ந்துரைப்பது மாத்திரமன்றித் தாம் ஓர இயலாத பிறவும் அதன்மேல் இருப்பினு மிருக்கலாம் என்றுன்னுவது நல்லறிவு நிலைத்த மேலோர் திறம் ஒரு காரியத்தின் காரணம் ஒன்றேயென உட்கொண்டுவிடுவது தாழ்ந்தபுத்தி. இதுவோ அதுவோவென்று சிந்தித்து இரண்டு மூன்று காரணங்களிலொன்றாகத்தான் இருக்கவேண்டுமென முடித்துவிடுவது மத்திம புத்தி. மற்று, உணரவல்ல இக்காரணங்கள் கிடக்க, ஊகிக்கவும் இயலாத வேறுகாரணங்களும் இருத்தலாகும் என்ற கொள்கையே உத்தமபுத்தியின் அறிகுறியாகும். மன்னர்களுரைத்த பொம்மல் வாசகம், உகவையின் மொழிந்ததோ, உள்ள நோக்கியோ, தகவென நினைந்ததோ என்ற மூன்று காரணங்களுக்குள்ளடங்கும் என்பதோடமையாமல், 'வேறேதேனும் அதன் காரணமாயின், அதை விளம்புவீர்" என்று சேர்க்கலாயினன் தயரதன். இத்தகை நிலைமையிற் தந்தையின் மொழிவழி பற்றியே அவன் மைந்தர்களும் வினவுவார்.

கோசிகன் பின்சென்ற இராமன் கெட்டழிந்த வெஞ்சுர மொன்றினைக் கோசலநாட் டெல்லையிற் காணலும் வியப்பெய்தி,

சுழிபடு கங்கையந் தொங்கல் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறுதா னுண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டினூங்
கழிவதென் காரண மறிஞ கூறென்றான்

இவ்வனம் அவர் எய்துதற்குமுன் காமனாசிரமத்தைக் கடக்கநேர்ந்தபோது, சிவனது நெற்றிக்கண்ணால் மன்மதன் தீய்ந்தவரலாற்றை விச்வாமித்திரன் உரைத்துளனாதலின், வளமழிந்து கிடக்குமாறு அச்சிவபிரானே இவ்வனத்தையும் சுட்டெரித் திருக்காலம் என உன்னியதோடு நில்லாமல், "வேறுதா னுண்டோ" எனச் சிறுவயதிலேயே இக்கோமகன் தன்மதியின் பெருமையைக் காட்டினன். பின்னுந் தன் காற்றுகள் கது

வேண்டியதையும் நிச்சயமாகச் செய்கின்றேன்'' என்று தன் னமைச்சனோ டரசன் சிறிது அசதியாடுகின்றான், என் றெண்ணுதற்கு, 'நன்று சொல்லினை' என்னு மவ் வாசகத்தின் தொனிப்பொருள் மாத்திரமல்லா மல், ''நீயே நம் மைந்தனைக் கொண்டணை'' என ஏவுவதும் ஆதாரமாகின்றது. ''ஒளிப்பினு யொளிக்க வொட்டா ஆர்வத்தால் அலசுகின்றாய்; ஆதலின், நீயே போய்க் கோமகனைக் கொணர்ந்து விரை வினில் யாவற்றையும் முடித்துவிடு'' என்னும் இங்கிதம் அவ்வேகாரத்தில் அடங்கியுளது என்னல் வேண்டும். இவ்வண்ணம் அப் பிரிநிலையேகாரத்தின் பொருள் போமளவு உய்க்குமாற்றல் தயரதனுக்கு மாத்திரமேயன்றி யவன்வயின் பிறந்த இராமனுக்கு முளது. பின்னுள், தன்னை நாடிவந்த வீடணனை வர வேற்கவோ மறுத் தகற்றவோ வெனத் தன்னுழைய ரோடு இராமன் மந்திரங்கூடி யாய்ந்தபோது சுக்கிரீ வன், ''இவன் தன் தமையனைத் துறந்தது தருமநீதி யாகுமோ; பகையுற வருதலுங் தன் தமையனைத் துறந்த பண்பிது நகையுறலன்றி நயக்கற்பாலதோ'' எனப் பலபடப் பேசித் தன்னுடைய சரித்திரத்தை அறவே மறந்து, தமையனைக் காட்டித்தருமொரு தம்பியின் நட்பை மறுத்தலே தக்கதென்று வற்புறுத் தவும், இவனும் இவனேபோல் சாம்பன் அனைய பல ரும் உரைத்தவைகளையும், வீடணனது வரவு நல் வரவே யென உணர்த்திய அநுமன் சொற்களையும் முடியக்கேட்ட இராமபிரான், இறுதியில் சுக்கிரீவனை நோக்கி,

......''கதிரோன் மைந்த
கோதிலா தவனை நீயே யென்வயிற் கொணர்தி'

என இந்துவெனு மவன்முகத்தில் மந்தநகை நடிக்கச் சுக்கிரீவனைப் போக்கியபரிசு மறத்தற்கொத்ததன்று. ''அடுத்தது செய்யவேண்டியதை விழைகின்ற சுமந் திர, நீயே இராமனை இங்கழைத்துவா'' என்று குறித் தனன் தந்தை; மகன், ''என்னைக்கொண்டே உன் தமையனைக் கொல்வித்த சுக்கிரீவ, நீயேயோ இன்று வீடணனது செய்கை நீதியன்றென நெடிது பேசு கின்றாய்! நன்று நன்று, உன்னினச் செய்கையனைய அவனை நீயே சென்று அழைத்துவா'' என்ற நுண் மையை ஏகாரத்தில் ஏற்றினான். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பேசுகின்ற வாசகங்கள் சில ஒத்திருக் கலாவது உண்மையாகையால் சற்றேறக்குறைய ஒரு தன்மைத்தாய இவ்விரு நிலையிலும் தயரதனும் இரா மனும் ஒரேவிதம் உரைக்கின்ற இயற்கையைக் கம்பர் பிரான் உணரவைக்கின்றார்.

இவ்வண்ணம் உதிரத் துறவினோடு உரையின் தொடர்பும் ஒத்திருக்கும் வியப்பினைப் பின்னுமோர் செய்யுள் இச்செவ்விபற்றி இப்படலத்திலேயே காட்டி நிற்கின்றது. சுமந்திரன் கொண்டணைந்த இராமன் பேரரசின் நெடுஞ்சுமையைத் தான் தாங்குதற்கு இசைந்தகன்றபின் தயரதன், நிருபர்களை வரவழைத் துச் செய்தியைச் செப்ப அவர்களும் நனிமகிழ்ந்து,

மூவெழு முறைமையெங் குலங்கள் முற்றுற
பூவெழு மழுவினுற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
காகவிவ் வுலகமீ தறனென் றாரே.

[''இருபத்தொருதலைமுறை எம் அரசகுலம் அழியும்படி கூர்மைபொருந்திய மழுவினுல் போர்செய்து தொலைத்த பரசுராமனது பராக்கிரமத்தை ஒடுக்கிய வீரனுக்கு இவ்வுல கம் உரிமையாக்கடவது தருமமே'' என்றார்]

கேட்டனன் தயரதன். தன்னகந் துளங்கிய மகிழ் வை ஒளிக்குஞ் சூழ்ச்சியனுய்,

மகன்வயி னன்பினுன் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவிப் பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததோ தன்மை யென்னென்றான்.

[''புத்திரனிடத்திலுள்ள ஆசையினுல் மயங்கி யான் அவனுக்கு அரசளிக்க இசைந்ததாய்ச் சொல்ல, நீங்கள் அதனைத் தழுவியுரைத்த இந்தப் பொலிவுடைய வாசகங் களை, சந்தோஷ மிகுதியினுற் சொன்னீர்களோ, அல்லது என்னுடைய நோக்கத்திற் கிணங்கி இச்சகமாக இசைத் தீர்களோ, அல்லது இதுதான் தக்கது என்று நினைத் தீர்களோ, அல்லது வேறு எத்தன்மைபற்றி உரைத்தீர்கள், உரைமின்'' என்றனன்]

விளக்கமுடைய அறிவினு லொரு விடயத்தை வினவுமுறை இன்னது. ஒன்றன்றிப் பலவேறு கார ணங்களால் ஒரு காரியம் நிகழ்ந்திருக்கக்கூடும் என எண்ணுவது தேர்ந்தபுத்தியின் தன்மை. மனத்தேர்ச்சி யில்லாதார், ஒன்றினைக் கண்டவுடன், எது அவர் புத்திக்குப் படுகின்றதோ அதுவே முடிவென்று பற் றிக்கொண்டு அதன்மேலொன்றும் நினைப்பதற் கிடந் தரார். இதற்கெதிர் தாம் ஊகிக்கவல்ல காரணங்களை யெல்லாம் ஓர்ந்துரைப்பது மாத்திரமன்றித் தாம் ஓர இயலாத பிறவும் அதன்மேல் இருப்பினு மிருக் கலாம் என்றுன்னுவது நல்லறிவு நிலைத்த மேலோர் திறம். ஒரு காரியத்தின் காரணம் ஒன்றேயென உட் கொண்டுவிடுவது தாழ்ந்தபுத்தி. இதுவோ அதுவோ வென்று சிந்தித்து இரண்டு மூன்று காரணங்களி லொன்றாகத்தான் இருக்கவேண்டுமென முடித்து விடுவது மத்திம புத்தி. மற்று, உணரவல்ல இக்கார ணங்கள் கிடக்க, ஊகிக்கவும் இயலாத வேறுகாரணங் களும் இருத்தலாகும் என்ற கொள்கையே உத்தம புத்தியின் அறிகுறியாகும். மன்னர்களுரைத்த பொம் மல் வாசகம், உகவையின் மொழிந்ததோ, உள்ள நோக்கியோ, தகவென நினைந்ததோ என்ற மூன்று காரணங்களுக்குள் அடங்கும் என்பதோ டமையாமல், 'வேறேதேனும் அதன் காரணமாயின், அதை விளம் புவீர்'' என்று சேர்க்கலாயினன் தயரதன். இத்தகை நிலைமையிற் தந்தையின் மொழிவழி பற்றியே அவன் மைந்தர்களும் வினவுவார்.

கோசிகன் பின்சென்ற இராமன் கெட்டழிந்த வெஞ்சுர மொன்றினைக் கோசலநாட் டெல்லையிற் காணலும் வியப்பெய்தி,

சுழிபடு கங்கையந் தொங்கல் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறுதா னுண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டினுாங்
கழிவதென் காரண மறிஞ கூறென்றான்

இவ்வனம் அவர் எய்துதற்குமுன் காமனுசிரமத்தைக் கடக்கநேர்ந்தபோது, சிவனது நெற்றிக்கண்ணுல் மன் மதன் தீய்ந்தவாலாற்றை விச்வாமித்திரன் உரைத்துள ளுதலின், வளமழிந்து கிடக்குமாறு அச்சிவபிரானே இவ்வனத்தையும் சுட்டெரித் திருக்காலம் என உன் னியதோடு நில்லாமல், ''வேறுதா னுண்டோ'' எனச் சிறுவயதிலேயே இக்கோமகன் தன்மதியின் பெரு மையைக் காட்டினான். பின்னுந் தன் காற்றுகள் கது



வக் கன்னின்று நல்லியல் நங்கையாய் மாறிநின்றவள் கோதமன் மனைவி அகலிகையாவாள் என்பதைக் கோசிகனுரைக்கக் கேட்டதும், ''என்னையே, என்னை யே, இல்வுலகியல் இருந்த வண்ணம்; முன்னையூழ் வினையினுலோ, நடுவொன்று முடிந்த துண்டோ; அன்னையே அனையாட்கு இவ்வாறு அடுத்தவாறு அருளுக'' என்றே இராமன் தான் ஊகிப்பதற்கு மேலொன்று இருக்கவும் இடந்தந்து வினவினன்.

தந்தைக்குந் தன்தமையனுக்கும் பின்னிடாச் சீலத் தன் பரதன், அயோத்தியில் உற்றதொன்று மறியா னுய்க் கேகயன் தேயத்தினின்று மீண்டநாள், இரா மன் வனத்தகம் நண்ணினனெனக் கைகேசி யுரைக்க வும்,

பூங்கழற் காலவன் வனத்துப் போயது
தீங்கிழைத் ததனினோ தெய்வஞ் சீறியோ
ஓங்கிய விதியினே யாதி னுலென

அன்னையைக் கேட்ட தன்மையும், அவன் குடும்பத் திற் கிசைந்த ஆராய்ச்சி விளைவையே நன்கு குறித்து நிற்கும்.

இத்தகைய பகுத்தறிவின் நுண்மையைத் தயர தன், வசிட்டன் சுமந்திரன் அரசர் ஆய இம்மூவர் வாய்மொழிகளைத் தேர்ந்து தனித்தனியுணர்ந்த நுண் மையிலுங் காணலாம். இராமனுக் கரசளிக்குமாறு பணித்த முனிவனை, ''இனிய சொல்லினை'' என்றும், அதற் குடன்பட்ட சுமந்திரனை, ''நன்று சொல்லினை'' என்றும், அன்னதைத் தான் விழைவதாக விளம்பிய அரசர் உரையினைப் 'பொம்மல் வாசகம்'' என்றும் வேறுவேறு வகையாகப் பாராட்டும் தயரதனது மதி நுட்பம் சிறக்கின்ற மேன்மை சிந்தித்தற் குரியது.

## வர்த்தமானம்.

உப்புச் சட்டமறுப்பு:—இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் நடைபெறும் உப்புச் சட்டமறுப்பைப் பற்றியும், இவ்வியக்கத்தின் பயனுய் உப்புவரி ரத்தாகு மாயின் அதனுல் பிரஞ்சு இந்தியக் குடிகளுக்கு ஏற் படும் சாதக பாதகங்களைப் பற்றியும், சந்திரநாகூர் மேயரும், பிரஞ்சு இந்தியச் சட்டசபை உபத்தலைவரு மான ஸ்ரீமான் சாரு சந்திரராய் எழுதுவதாவது:—

இந்தியாவில் உப்பு விளைவிக்கச்செய்யும் உரிமை சென்ற 17வது நூற்றாண்டில், அக்காலம் இந்தியா வுடன் வியாபாரம் செய்துவந்த பல ஐரோப்பிய கம் பெனிகளுக்கு மகமதிய மன்னர்களால்கொடுக்கப்பட் டது. இந்தியாவின் அரசியல் கிழக்குஇந்தியக் கம் பெனியின்கீழ் வந்தபிறகு 1815-ம் வருஷம் பிரஞ்சுக் காரர்களும், கிழக்கு இந்தியக் கம்பெனியாரும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர். இவ்வுடன்படிக் கைபடி உப்பு உண்டுபண்ணும் உரிமையைக் கம்பெனி யாரே பெற்றனர். ஆனுல் கம்பெனியார் தாங்கள் இவ் உரிமையை அனுபவிப்பதற்காகப் பிரஞ்சு கவர்மெண் டாருக்கு ஒருதொகை கொடுத்துவந்தனர். உடன் படிக்கையில் கண்ட விகிதப்படி 1817-ம் வருஷம் 10 லட்சம் பிராங்கு பிரஞ்சு கவர்ன்மெண் டிற்குப் பிரிட்டிஷ்காரரால் கொடுக்கப்பட்டது. 1891-ம் வருஷத்தில் ஏழுலட்சத்து ஏழாயிரம், 1927-ம் வருஷத்தில் நாற்பத்து ஆறு லட்சத்துத் தொண்ணூற்றாறுயிரம். 1928-ம் வருஷத்தில் முப் பத்தொன்பது லட்சத்து அறுபத்து ஈராயிரம், 1929-ம் வருஷத்தில் முப்பத்தொன்பது லட்சத்து நாற்பத்து எண்ணுயிரமாகவும் இந்த வருஷத்தில் முப் பத்தெட்டு லட்சத்துமுப்பத்து ஐயாயிரம் பிராங்குக ளாகவும் கணக்கிடப்படுகிறது. பிரஞ்சுஇந்திய கவர்ன் மெண்டார் இத்தொகைதங்களுக்கு ஏகதேசச்சொந்த மென்றும், ஏனென்றால் உப்பு உற்பத்தி செய்யும் பாத்தியமானது இந்தியாவில்தான் பிரஞ்சு கவர்ன் மெண்டாருக்குக் கிடைத்ததென்றும், உடன்படிக்கை ஐரோப்பாவில் ஏற்பட்டபோதிலும் அதன்மூலம் ஏற் பட்டிருக்கும் வரும்படியானது பிரஞ்சு இந்தியக் கவர் ன்மெண்டாரையே சேரவேண்டியது என்பதும்நியாய மாகும். இந்த நியாயத்தைப் பிரஞ்சுத் தலைமை கவர்ன் மெண்டுக்குப்பிரஞ்சு இந்தியக்கவர்ன்மெண்டார் அடிக் கடி எடுத்து வற்புறுத்திக் கூறியபோதிலும் அவர்கள் அதை ஒப்புக்கொள்ளாமல் வெகுகாலம் மறுத்து விட்டுக் கடைசியாக 1906-ம் வருஷத்தில் உப்பு உற் பத்தி பாத்தியதையின் விற்பனைமூலம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிட மிருந்து பிரஞ்சு கவர்ன்மெண் டுக்குக் கிடைக்கும் வருடாந்திரத் தொகையிலிருந்து மூன்று லட்சத்து எண்பதினுயிரம் பிராங்குகளை பிரஞ்சு இந்திய அரசாங்கத்திற்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். ஆனுல் நாளது தேதி வரை யில் பிரஞ்சு இந்திய அரசாங்கத்திற்கு யாதொரு தொகையும் கிடைக்கவில்லை.

உப்புவரி இப்பொழுது எடுக்கப்படுமாயின், பிரஞ் சுக் கவர்ன்மெண்டிற்கு உடன்படிக்கையின்படி கிடைக்கவேண்டிய தொகை போய்விடும். இதனுல் பிரஞ்சு வரவுசெலவுத் திட்டம் பாதிக்கப்படலாம். பிரஞ்சு இந்திய அரசாங்கத்திற்கோ யாதொரு நஷ்ட மும் கிடையாது. இதனுல் ஜனங்களுக்கு லாபமும் உண்டு. குறைந்த விலைக்கு உப்பு அகப்படும். பிரஞ்சு கவர்ன்மெண்டார் உப்புப் பாத்தியதைக்காகப் பெற்ற பணம் பிரஞ்சு இந்திய அரசாங்கத்திற்கு உபயோகப் படவில்லை.

வேதாரணிய உப்பு வரலாறு:—பண்டைநாள்முதல், வேதாரணியம் உப்பு உற்பத்திக்குப் பேர்போனது. வேதாரணியத்தில் 35 மைல் விஸ்தீரணமுள்ள உப் பளங்கள் இருந்தனவென்றும் இங்கு இயற்கை உப்பு மேடுமேடாய் இருந்ததென்றும் ஹேமிங்ஸ் என்னும் சரித்திர ஆசிரியர் கூறியுள்ளார். மே, ஜூன் மாதங்க ளில் பௌர்ணமி காலத்தில் கடல்பொங்குமென்றும், கடல் பொங்கியதால் முழுகிப்போன கரைகளில் ஜலம் வடிந்தபிறகு உப்பு பாறைபாறையாய் இருக்கு மென்றும், இதனுல் சிரமமில்லாமல் ஏராளமாக உப்பு அகப்பட்டதென்றும் அவ் வாராய்ச்சிக்காரர் கூறு கிறார். 1804-ம் வருஷம் பிரிட்டிஷார் இங்கு உப்பு உற்பத்தி செய்வதை நிறுத்திவிட்டனர். பிறகு உப்பு உற்பத்திநிலைமை மிகவும் இலாக்கா ஏற்பட உப்பு உற்பத்திநிலைமை மிகவும் மாறிவிட்டது. முன் வேதாரணிய உப்பு வருமான முழுதும் தமிழர்களால் பரிபாலிக்கப்பட்டு வேதா ரண்யம் வேதபுரீசுரர் ஆலயத்தைச் சேர்ந்ததாகவே இருந்துவந்ததென்று கூற அநேக ஆதாரங்கள் இருக்கின்றன. நாளடைவில் கோயில் அதிகாரிகளின் அனுபவமும் குறைக்கப்பட்டு விட்டது 1887-ம் வருஷத்தில் சுமார் 22 உப்பளங்கள் தஞ்சை ஜில்லா வில் இருந்தும், 1903-ம் வருஷத்திற்குள் அது ஏழாக மாறி விட்டது. இப்பொழுது மிகவும் சொற்பமே இருந்து வருகிறது. மகாராஷ்டிர அரசர்கள் தஞ் சையை ஆண்டுவந்த காலத்தில் வேதாரண்யத்தி லிருந்து வியாபாரத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உப்பின்மேல் மற்ற சாமான்களைப்போல் மிகவும் சொற்பமாகத்தான் வரிபோடப்பட்டதென்றும் இத ஞல் ஜனங்களுக்கு மிகவும் அனுகூலம் கிடைத்த தென்றும் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இதைத்தான் ஸ்ரீ ஹெமிங்ஸ்வேயும் தன்னுடைய 'தஞ்சைமாகாண' என்னும் புத்தகத்தில் கூறி யிருக்கிறார். வேதாரண்யத்தில் இயற்கைஉப்பு பெரிய பாறைகளாகப்படிவதுண்டென்றும், அதை ஜனங்கள் எடுத்து விசித்திரமான யானைகள், குதிரைகள் முத லிய பதுமைகள் செய்து தஞ்சை அரசர்களுக்கு வெகுமானமாய் அனுப்புவது உண்டென்றும் கூறப் படுகிறது.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமோம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பைபிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பைபிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::



## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

189162


நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்துகொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.



ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAQER:—

KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

KALANILAYAM.
REG. NO. M. 2324.


## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ,, ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணா | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## ரூ. 500 இனம்! எப்படி?

விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள்-இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—“கலா நிலயம்”,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.


Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)